www.padippakam.com

# வேலணை மத்திய மகா வித்தியாலயம்

## பழைய மாணவர் சங்கம் - பிரித்தானியா

வழங்கும்

# "சங்கமம்"

## 2001




***Velanai Madya Maha Vidyalayam***
***Old Students' Association - U.K.***

படிப்பகம்

www.padippakam.com


*House of Fine Jewellery*

# LAKSHMIS

*Jewellers & Silk House*



பிரமிக்கத்தக்க அழகுக்காட்சியறையில் திருமண
வைபவத்திற்குத் தேவையான வைரத் தாலிக்கொடி முதல் பட்டுச்
சேலைகள் வரை ஒரேயிடத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய

முதலாவது தமிழர் களஞ்சியம்

## லக்சுமி ஜுவலர்ஸ்

276 High Street North, East Ham, London E12 6SA

**Tel: 020 8470 5600 Fax: 020 8470 3448**

Opening Hours: Mon - Sun:10.30 a.m. - 7.00 p.m.

Tax free for overseas visitors


படிப்பகம்

www.padippakam.com

# வேலணை மத்திய மகா வித்தியாலயம்

## பழைய மாணவர் சங்கம் பிரித்தானியா

பதினான்காவது ஆண்டாகப் பெருமையுடன் வழங்கும்

# சங்கமம்

# 2001

காலம்: 14.07.2001 சனிக்கிழமை

இடம்: Wembley High School
East Lane
Wembley

படிப்பகம்

www.padippakam.com

# கருணை ஒளியே எமக்கு வழி காட்டு



கல்லூரி ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும்
சிவகாம சுந்தரி சமேத நடராஜப் பெருமான்



படிப்பகம்

www.padippakam.com

வேலணை மத்திய மகா வித்தியாலயம்
பழைய மாணவர் சங்கம் பிரித்தானியா

# சமர்ப்பணம்

சங்கமம் 2001

ஐம்ப தகவை யெய்திய தெங்கள்
கல்லூரித் தாயின்
பொன் மலர்ப் பாதங்களில் அறிவுச்
சுடரேற்றி வைத்த
அதிபர்கள் ஆசான்கள்
அனைவருக்கும் நன்றி கூர்ந்து
இம் மலரை பணிவன்புடன்
சமர்ப்பிக்கின்றோம்.



மலர் வெளியீடு:
வே. ம. ம. வி பழைய மாணவர் சங்கம்
பிரித்தானியா

படிப்பகம்

www.padippakam.com



# மறப்பேனா?

பட்டினி கிடந்து பசியால் மெலிந்து
பாழ்பட நேர்ந்தாலும் - என்றன்
கட்டுடல் வளைந்து கைகால் தளர்ந்து
கவலை மிகுந்தாலும் - வாழ்வு
கெட்டு நடுத்தெரு வோடு கிடந்து
கீழ்நிலை யுற்றாலும் - மன்னர்
தொட்டு வளர்த்த தமிழ்மகளின் துயர்
துடைக்க மறப்பேனா?

நோயில் இருந்து மயங்கி வளைந்து
நுடங்கி விழுந்தாலும் - ஓலைப்
பாயில் நெளிந்து மரண மடைந்து
பாடையில் ஊர்ந்தாலும் - காட்டுத்
தீயில் அவிந்து புனலில் அழிந்து
சிதைந்து முடிந்தாலும் - என்றன்
தாயில் இனிய தமிழ்மொழியின் துயர்
தாங்க மறப்பேனா?

பட்ட மளித்துப் பதவி கொடுத்தொரு
பக்கம் இழுத்தாலும் - ஆள்வோர்
கட்டி அணைத்தொரு முத்த மளித்துக்
கால்கை பிடித்தாலும் - என்னைத்
தொட்டு விழுந்து வணங்கி இருந்தவர்
தோழமை கொண்டாலும் - அந்த
வெட்டி மனிதர் உடல்களை மண்மிசை
வீழ்த்த மறப்பேனா?

பொங்கு வெறியர் சிறைமதிலுள் எனைப்
பூட்டி வதைத்தாலும் - என்றன்
அங்கம் பிளந்து விழுந்து துடிக்க
அடிகள் கொடுத்தாலும் - உயிர்
தொங்கி அசைந்து மடிந்து தசையுடல்
தூள்பட நேர்ந்தாலும் - ஒரு
செங்களம் ஆடி வரும் புகழோடு
சிரிக்க மறப்பேனா?

**உணர்ச்சிக்கவிஞர்**
**காசி ஆனந்தன்**

படிப்பகம்

www.padippakam.com

# கல்லூரிக் கீதம்

வாழ்த்துவோம் வாழ்த்துவோம்
வாழ்த்துவோம்
வாழ்க பாடசாலையென்று
வணங்கிக் கூடி வாழ்த்துவோம்

ஆழி சூழும் ஏழு தீவும்
அறிவு காணும் சாலையாம்
ஊழி ஊழி ஓங்கும் சேவை
உயர்வு காணும் சாலையாம்
வாழி வேலணை மத்திய மகா
வித்தியா சாலையாம்
வாழி ஊழி ஊழி யென்று
வணங்கிக் கூடி வாழ்த்துவோம்
அன்பு ஒளியைக் காட்டும் வழியே
ஆய சின்னம் அதுவாய்க்
கொண்டு ஓங்கும் கொள்கை வழியே
குலாவும் சிறார்கள் வாழ்கவே
நன்று கல்வி நாளும் நல்கி
நல்லொழுக்கம் வளர்க்குமே
நின்று நாமும் நாடும் வாழ
நிலைக்கும் சேவை போற்றுவோம்
ஞானம் சீலம் நாடு எங்கும்
நல்கி மல்கிப் பெருகவே
மான வீர மாணவர்கள்
வளர்த்தெடுக்கும் தாயிவள்
ஆயகலைகள் அறிவியல்கள்
அள்ளி அள்ளி ஊட்டுவாள்
தேனருந்து வண்டு எனத்
திளைத்து நாங்கள் போற்றுவோம்
அன்பு ஆசார் அதிபர் கூடி
ஆக்கம் காட்டும் கோவிலாம்
இன்பத் தமிழோ டாங்கிலத்தை
ஏந்திப் போற்றும் கோவிலாம்
நன்று ஆட நயந்துபேச
நமக்கருள் செய் கோவிலாம்
நின்று நாமும் நாடும் வாழ
நிலைக்கும் சேவை போற்றுவோம்
போற்றுவோம் போற்றுவோம்
வாழ்த்துவோம் வாழ்த்துவோம்
வாழ்த்துவோம்.

படிப்பகம்

www.padippakam.com

## போசகரிடமிருந்து......

# அன்னையின் அடியில் எம் அஞ்சலி

ஆதிபராசக்தி அவள் எம் அன்னை
அகழ்வாரைத் தாங்கும் நிலமகள் அன்னை
வேதனை தாங்கிப் பெற்றவள் அன்னை
போதனை செய்தெம்மை வளர்த்தவள் அன்னை
காதலுடன் எமைக் கற்பித்த அன்னை
கருத்தினில் இருந்திடும் கயல்விழி அன்னை
ஓ தரும் உத்தம பத்தினி அன்னை
உண்மை நிலைத்திட வாழ்த்திடும் அன்னை
வேலணை மத்திய கல்லூரி அன்னை
விதம் விதமாய் அவள் வித்தினை இட்டு நாம்
வித்தகராக வழி வகுத்திட்டாள்
கற்க கசடற எனப் பணிந்திட்டாள்
கல்லாதவர்கட்கும் கண்மணி ஆனாள்.
ஏற்றமுற அவள் இருந்திட்ட நாளில்
எத்தனை எத்தனை மாணவ மணிகள்
இங்கிதமாய் பெரும் பதவியை ஏற்றார்
ஆசிரியப் பணி அன்னையின் அகத்தில்
தேசிய ரீதியில் செப்பரும் பல்பணி
வைத்தியராகவும் வாணிபராகவும்
வளர் கணித்துறை வல்லுனராகவும்
சட்டம் பொறியியல் விஞ்ஞானமஃதுடன்
சான்றோர் போற்றிடும் சாதனைக் கோர்பணி
ஆன்ற உழவுத்துறையாகும் கமப்பணி
ஆதிய யாவையும் அவரவர் ஏற்றிட
அணைத்து வளர்த்திட்ட அன்னையுமவளே
அன்னவளே எம் வாழ்த்துக்குரியவள்
நல்லன யாவையும் போற்றிடும் பண்பே
நமக்கவள் அளித்த நற்செல்வமாகும்
சொல்லில் செயலில் தூய்மையை நாடி
அன்னைக்கென நாம் அரும்பணி ஆற்றுவோம்
அடிமைத் தனையில் அல்லற்பட்டோம் நாம்
அக்கினிச் சுவாலையில் அரும்பிடும் தங்கம் நாம்
அனைத்து மாணவரும் அன்னையை மறவாது
அவளுக்கென்றே அன்றாட நிதியில்
ஐம்பதி லொன்றை ஓரிடத்திடுவோம்
கணக்கில் நிதியம் கனமாய் சேர்ந்திடும்
கட்டி எழுப்புவோம் கண் குளிரத்தான்.
கலாசாலைக்கென கவின் தரும் கூடங்கள்
பல்லாண்டு எமதாய வாழ்கவென வாழ்த்திப்
பணிவோம் அவள் தான் பண்புடனே நாமும்
அகிலமெங்கனும் அவள் பெயர் ஓங்கிட
ஒற்றுமை தழைக்க உறவுகள் வளர்ந்திட
வேற்றுமையின்றி நல்வினை ஆற்றிட
விரிந்த உலகின் பலபாக மஃதிலும்
விளிப்புடன் வாழும் மாணவரெல்லாம்
ஆற்றுவோம் நற்பணி அதுவே பெருமை
அன்னையின் அடியில் அஞ்சலி சமர்ப்பணம்.

ஆக்கம்
வரதா சண்முகநாதன்.

படிப்பகம்

www.padippakam.com



# சங்கத்தலைவர் சிந்தனையில்...

## "ஆழி சூழும் ஏழுதீவும் அறிவுகாணும் சாலையாம் "

எமது வே. ம. மகாவித்தியாலயத்தில் பழைய மாணவர் காலத்தின் 14வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் முகமாகவும் எம்மிடையே உறவுச் சங்கிலியை ஏற்படுத்தி அதன் மூலம் கல்லூரித் தாய்க்கு நன்றிக்கடனைச் செய்வதற்குத் ஊக்கம் தரும் வகையிலும் வெளியிடும் 2001 மலர் வெளியீட்டுக்கு வாழ்த்துச் செய்தி தருவதில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

எமது மண்ணின் தற்போதைய காலச் சூழ்நிலையில் பலதரப்பட்ட பிரச்சனைகளுக்கு மத்தியில் கல்லுரியின் வளர்ச்சிக்கும் மாணவர்களின் முன்னேற்றத்திற்கும் தன்னலமற்ற சேவை செய்த தற்போது செய்து கொண்டிருக்கும் அதிபர்கள் ஆசிரிய ஆசிரியைகள் பழைய மாணவர்கள் அனைவர்கட்கும் என் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

எமக்கு அறிவூட்டிய கல்லூரித்தாய் இன்று பல இன்னல்களுக்கு உள்ளாகியிருப்பது யாவரும் அறிந்ததே இந்தக் காலகட்டத்தில் பாடசாலையின் தேவை அறிந்து தேவைக்கேற்ப இச்சங்கம் பலதரப்பட்ட நற்திட்டங்களை வகுத்து தன்னாலான சேவையை ஆற்ற முன்வந்துள்ளது ஆகவே இங்கு ஆங்காங்கே இருக்கும் ஆசிரிய ஆசிரியர்கள் பழைய மாணவர்கள் பாடசாலை நலன்விரும்பிகள் ஒன்றிணைந்து தங்களால் முடிந்தளவு பங்களிப்பை நல்கி தங்களின் அபிப்பிராயங்களை முன்வைத்து மென்மேலும் வளர்ச்சியுறச் செய்ய வேண்டும் என்றும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இப்பழைய மாணவர்கள் சங்கத்தை உருவாக்கி சங்கத்தின் வளர்ச்சிக்கு சேவை புரிந்த போசகர் முன்னால் தலைவர்கள், நிர்வாக உறுப்பினர்கள் வர்த்தகப் பெருமக்கள் அனைவரையும் பாராட்டி நன்றியையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

வாழ்க கல்லூரித்தாய் வளர்க நம் சேவை

தலைவர்.
இ.சிவதாஸ்
பழைய மாணவன்

படிப்பகம்

www.padippakam.com

# சங்கச் செயலாளரிடமிருந்து....

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்ததுவே" என்பது ஆன்றோர் வாக்கு. இதுபோலவே நாம் கற்ற கல்லூரியும் கற்பித்த ஆசிரியர்களையும் போற்றிப் பேணவேண்டும். நாம் இந்த நிலையில் இருப்பதற்கு காரணம் கற்ற கல்லூரியும் கற்பித்த ஆசிரியர்களுமே ஊர்தேசம் விட்டு வெளிநாடுகளில் வாழும் தமிழராகிய நாம் இதை எப்பொழுதும் சிந்தையிற் கொள்ளவேண்டும்.யுத்தம் காரணமாக பெருவாரியான ஈழத்தமிழர் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் தொழில் புரிந்தும் வியாபாரங்களை உருவாக்கியும் கலை கலாச்சாரங்களைக் கற்பித்தும் பேணியும் பலரும் மெச்சக் கூடிய முறையில் வாழ்ந்து வருவது பெருமைப்பட வேண்டிய விசயம் தான்.

அதேநேரம் நாம் பிறந்து வாழ்ந்த ஈழத்துத் தமிழர் யுத்தம் காரணமாகப்படும் துன்பம் அளவற்றது. அங்கு வாழும் பிள்ளைகள் கற்று வந்த கல்லூரிகள் நிற்பாட்டப்பட்டு விட்டன. பல பாடசாலைகளை இணைந்து ஒரு பாடசாலை ஆக்கப்பட்டுள்ளது. பல கல்லூரிகள் உடைந்தும் சிதைந்தும் காணப்படுகின்றன. புனருத்தாரணம் செய்யப்படாமலும் அடிப்படைவசதிகளான கதிரை, மேசை, புத்தகங்கள், என்பன இல்லாமலும் சில கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இப்படியான ஒரு கல்லூரிதான் யாழ் வேலணை மகாவித்தியாலயம்.

இக் கல்லூரியில் நான் படித்த காலத்தில் கணிசமான அளவு மாணவர்களும் ஆசிரியர்களும் இருந்தனர். தற்போது அரைவாசிக்கும் குறைந்த பிள்ளைகளே கற்றுவருகின்றனர். ஆசிரியர்களும் மிகக்குறைவு. அக்காலத்தில் தீவுப் பகுதிகளுக்கெல்லாம் தலையாய கல்லூரியாக இது விளங்கியது. என்பதை யாவரும் அறிவர். பல கல்லூரி அதிபர்களின் உழைப்பாலும் ஆசிரியர் பெற்றோர் ஒத்துழைப்பாலும் இக்கல்லூரி முன்னணியில் திகழ்ந்தது. இக் கல்லூரியின் மேம்பாட்டுக்காக பிரித்தானியாவில் அங்கு கற்ற தமிழர் இந்த பழைய மாணவர் சங்கத்தை உருவாக்கினர். அதன் செயலா-ளர் பொறுப்பையும் ஏற்குமாறு பணிக்க நானும் அதை ஏற்று என்னாலான உதவிகள் யாவற்றையும் செய்து வருகிறேன்.

இச்சங்கத்தை அறியாதவர்களும் இந்நாட்டில் இருக்கலாம். அல்லது அணுக முடியாது என்றெண்ணி வாழலாம். அப்படிப்பட்டவர்கள் இருந்தால் இச்செய்திகளைக் கேட்டவுடன் தொடர்பு கொண்டு இளைய முனவாருங்கள். தங்களால் இயன்ற பண உதவி பொருள் உதவிகளைச் செய்வதுடன் நிர்வாகத்திலும் பங்கேற்க முன்வர வேண்டும். கல்லூரியின் நிலைமைகளை அவ்வப்போது அறியவும் அவ்வப்போது சில அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கவும். சங்கத்தினூடாக முன்வரவேண்டும்.

இக்கல்லூரிக்காக ஏற்படுத்தப்பட்ட வங்கிக்கணக்கை நாள்தோறும் பல வழியிலும் பெருக்கிவர முன்வரவேண்டும். இதனால் எமது தமிழீழ மண்ணில் அமைதிச்சூழல் ஏற்படும் போது எங்கள் கல்லூரியை முன்னிருந்த நிலைக்கும் பன் மடங்காக்கி நவீன வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து எங்கள் நன்றிக் கடனைக் காலம் எல்லாம் காட்ட முடியும்.

அன்புடன்
திருமதி ஜெயபாலினி ரவீந்திரன்
பழைய மாணவி



படிப்பகம்

www.padippakam.com

# பொருளாளரிடமிருந்து...



எமது தாய்த் திருநாடாம் ஈழமண்ணின் வடபால் சப்த தீவுகட்கும் நடுநாயகம் போல் லைடன் தீவின் வேலணையூரின் மத்தியில் அழகுற வீற்றிருந்து கொண்டு எமது நாட்டின் தலை சிறந்த கல்விமான்கள், விற்பன்னர்கள் பலரை உருவாக்கிக் கொடுத்த அந்த கலைக் கோவிலின் பழைய மாணவன் என்ற முறையில் நான் மிகவும் பெருமையடைவதோடு யாழ்மாவட்ட கல்வித் திணைக்களத்தின் கட்டிடபரிசோதகராக இருந்து அதன் மூலம் குறிப்பாக எனது கல்லூரிக்கு சேவையாற்றக் கிடைத்த சந்தர்பத்தால் இரட்டிப்புப் பெருமையடைகின்றேன். அந்த நேரத்தில் பல கூட்டுத் திட்டங்களை அந்தந்த அதிபர்களுடன் சேர்ந்து செயலாற்றி தேவையான நேரங்களில் திணைக்களத்தின் நிதியுதவியையும் பெற்றுக்கொடுத்து நடைமுறைப் படுத்தினோம். தொடர்ந்து செயல்பட முடியாமல் சூழ்நிலை மாறிவிட்டது மிகவும் கவலைக்குரியது.

## கல்லூரியைப் பற்றிய சில சிந்தனைகள்

இலங்கையில் முதன்முதலில் அதி நவீன கட்டிட அமைப்புடன் கூடிய பெரிய கல்லூரிக் கட்டிடமும், ஆண்,பெண் இருபாலருக்கும் இரு விடுதிகளும் கொண்ட கட்டிடத் தொகுதியில் மூன்று யாழ் மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட நிலையில் அதில் ஒன்றை எமது கல்லூரி பெற்றது அதன் தரத்துக்குச் சான்று பகரும். மற்றைய இரு கல்லூரிகளிலும் இந்தக் கட்டிடத் தொகுதி அழிந்த நிலையில் எமது கல்லூரியில் இன்றும் என்றும் ஏற்றுக் கொள்ளக்கூடிய பொலிவுடன் அழகுறக் காட்சி தருகிறது. எமது கல்லூரி 1970ம் ஆண்டு முற்பட்ட பகுதியில் ஆரம்பத்தில் இருந்து படிப்படியாக அபார வளர்ச்சி கண்டது. யாழ் மாவட்டத்தின் 649 கல்லூரிகளில் முதல் ஒன்பது கல்லூரிகளில் ஒன்றாகத் தரம் உயர்த்தப்பட்டது. அந்தக் காலகட்டத்தில் மற்றைய முன்னனிக் கல்லூரிகளுடன் விளையாட்டு, கல்வி, கலை ஆகிய துறைகளின் சினேக பூர்வமாகப் போட்டியிட்டுப் பல பரிசில்களையும் பாராட்டுக்களையும் பெற்றதை மறக்க முடியாது.

இவற்றிற்கு பல காரணங்கள் இருந்தும் அதிபர், ஆசிரியர்களின் பங்களிப்பும், மாணவர்களின் பொறுப்புணர்வுகளும் முக்கியமானதாகக் கருதலாம். அதிபர் தம்பு அவர்களைத் தெரிந்தவர்கள் அறிந்தவர்கள் யாவரும் அவருடைய செயல்திறனை என்றுமே மறக்கமுடியாது. அவருடைய செயல்பாட்டால் கல்லூரியின் தரம் உயர்த்தப்பட்டது. கல்லூரியும் ஓரளவு குறுகிய காலத்திலே முழுமை பெற்றது. மாணவர்களின் முன்னேற்றமே குறிக்கோளாகக் கொண்டு நேரம் பாராது சேவை மனப்பான்மையுடன் கடமையாற்றிய ஆசிரியர்கள் பலரில் சிலரை நினைவு கூரலாம். திருவாளர்கள் பஞ்சாட்சரம், அல்விஸ், கேதாரநாதன், சண்முகநாதன், கோபாலபிள்ளை, இராஜநாயகம், சம்பந்தர், பொன்னுச்சாமி, ஜெகநாதன்,திருமதி கேதாரநாதன், செல்வி கந்தையா போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர்களில் மூவர் எமது கல்லூரியில் அதிபராகவும் கடமை ஆற்றியுள்ளார்கள். பிற்பட்ட காலப்பகுதியில் எமது கல்லூரி தொடர்ந்து வீழ்ச்சி அடைந்து கொண்டே வந்தது. தற்சமயம் நாட்டு நிலைமை காரணமாக ஆரம்பநிலைக்கு வந்துள்ளது. ஆனாலும் கஸ்டமான காலப்பகுதியில் கடமையாற்றிய ஆசிரியர்கள் அதிபர்கள் போற்றப்படக் கூடியவர்கள். நாங்களும் பாராட்டுகின்றோம்.

இன்று இக்கல்லூரியின் வளர்ச்சியை நல்ல முறையில் கட்டி எழுப்ப வேண்டுமானால் பொருளாதார உதவியே முக்கியமானது. குறிப்பாக உலகமெங்கும் பரந்துபட்டு வாழும் பழைய மாணவர்களின் பங்களிப்பில் தான் முக்கியமாக கல்லூரி தங்கியுள்ளது. மற்றைய நாடுகளில் பாராட்டக் கூடிய முறையில் செயல்படுகிறார்கள். அதுபோல் ஐக்கிய இராச்சியத்தில் வாழ்கின்ற பழைய மாணவர்களும் ஒன்று கூட்டி உருவாக்கிய இந்த நிர்வாக சபை மூலம் புதுப்பொலிவுடன் “சங்கமம்” என்ற ஆக்கத்தை வெளியிட்டு வைப்பதில் நாம் பெருமை அடைகின்றோம். இதற்குப் பல வழிகளிலும் உதவி புரிந்த சகமாணவர்கட்கும் நிறுவனங்கட்கும் நிர்வாக சபையின் நன்றியைத் தெரிவிப்பதோடு தொடர்ந்து பங்களிப்பு நல்கி கல்லூரியை வளர்ச்சியுற வைக்க வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.முதலாவது வெளியீடு என்பதால் தவறுகள் ஏற்படலாம். யாவற்றையும் நிறைவுடன் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

பொருளாளர்
ந. பாலச்சந்திரன்

படிப்பகம்

www.padippakam.com

*Experienced Tamil*
*Jeweller in London*



வெஸ்டர்ன் ஜுவலர்ஸ்

*Western Jewellers*

230 Upper Tooting Road
London SW17 2EW
**Tel: 020 8767 3445**

படிப்பகம்

www.padippakam.com

# கல்லூரி அதிபரின் வாழ்த்துச் செய்தி



வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர்களினால் ஐக்கிய இராச்சி யத்தில் தொடங்கப்பட்ட வேலணை மத்தியமகா வித்தியாலய பழையமாணவர் சங்கம் புதுப்பொலிவு காண்பதையிட்டுப் பெருமகிழ்வு அடைகின்றோம். பழைய மாணவர்களின் ஒன்று கூடலும், அதற்கான மலர் ஒன்றினையும் வெளியிடயிருப்பதை அறிந்து அகமகிழ்வு அடைகின்றோம்.

உங்களின் ஒன்றுகூடல் எமது பழைய மாணவர்களிடையே நல்ல நட்பையும், நிலையான நெருக்கத்தை ஏற்படுத்துவதுடன் நம்மை வளர்த்தெடுக்க கல்லூரி அன்னையிடம் கூடியபற்று ஏற்படவும் வழிவகுக்கும். தங்கள் இத்தகைய பணிக்கு எனது மனமுவந்த வாழ்த்துக்கள்.

கல்லூரி அன்னையிடம் கல்வி பயின்ற பலர் பல நாடுகளில் பரந்த பல தொழிற்றுறைகளில் சிறப்புற்று விளங்குவதுடன் அன்னையை மறவாது செயற்படுவதைக்கண்டு எனது மனம் பூரிப்படைகின்றது. தற்காலத்து இடர்பாடுகளின் மத்தியிலும் கல்லூரி அன்னை பழைய நிலைக்கு வளர்ந்து வருகின்றாள் என நினைக்கும்போது உங்கள் மனம் பூரிப்படையும் என நினைக்கின்றேன்.கல்லூரி வளர்ச்சிக்கு உங்கள் ஆக்கமும் ஊக்கமும் ஒத்துழைப்பும் என்றும் தேவையாகவுள்ளது.

அன்னையின் மைந்தர்களாகிய நீங்கள் எடுக்கும் ஒன்றுகூடல் விழாவும் அதற்கான மலர் வெளியீடும் சிறப்புற எனது வாழ்த்துக்கள் உரித்தாகுக.

கருணை ஒளியே வழிகாட்டு.
வாழ்க வளர்க நின்பணி.

திரு. கு. கணேசலிங்கம்
அதிபர்.

யா/ சேர் வைத்தியலிங்கம் துரைச்சுவாமி
மத்திய மகா வித்தியாலயம்
வேலணை

படிப்பகம்

www.padippakam.com


தமிழர்கள் விரும்பிச் செல்லும் நகை மாளிகை

# AMBAAL JEWELLERS

## The Leaders in 22KGold Jewellery

ரூட்டிங் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்துக்கு அருகாமையில்



அதிஉயர்தரம் - தன்னிகரற்ற தங்கம் - அழகுமிக்க
எழில் கொஞ்சும் அதிநவின வடிவமைப்பு-
அனைவருக்கும் எவரும் தராத தனித்துவமான
நியாய விலையில் அசல் தங்க ஆபரணங்கள்

நவீன பாரம்பரிய நகைகள்.. சிறந்த டிசைன்கள்...
திருமண ஓடர்களுக்கு சிறப்பு விலைகள்.

லண்டனில் குறுகிய காலத்தில் மக்கள்
நன்மதிப்பைப் பெற்ற நிறுவனமாகத் திகழ்கிறது

உங்கள் எண்ணம் போல் வண்ணம் கொண்ட
ஆபரணங்கள் அணி வகுக்கும் அழகான தங்க நகைச் சோலை

மலிவின் மறுபெயர்

## அம்பாள் ஜுவலர்ஸ்

திருத்த வேலைகள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.
பொன்னுருக்கலுக்கு வசதிகள் செய்துதரப்படும்.

ஏழு நாட்களும் திறந்திருக்கும்

# அம்பாள் ஜுவலர்ஸ்

176, Upper Tooting Road, London SW17 7ER

**Tel: 020 8672 9955**

Fax: 020 8672 7097

www.padippakam.com



மறைந்த அதிபர்
திரு. J.S. அரியரெத்தினம் அவர்களுக்கு அஞ்சலி

அறநெறி பண்பே யாகி
அறிவுடை நீதி யாகி
கறவையின் பால் போல் என்றும்
கள்ளமில்லா இதய மாகி
திறமையை முதலாய்க் கொண்டு
தெரிவுறு அதிப ராகி
நிறைவுறு சேவை செய்து
நித்திலம் விட்டுச் சென்ற
குறையிலாத் தமிழே உமக்குக்
கோடியாய் அர்ச்சனை மலர்கள்.

அயல் நிலத்தில் பிறந்தபோதும்
அறிவுடன் பிரியா நண்பராகி
பண்பிலும் சிகர மாகி யெம்
பள்ளியிலோர் ஆசா னாகி
ஐந்தாவது அதிபர் தொடரில்
ஐந்து வருட சேவை செய்து
அயராது உழைத்த செம்மல் - உமக்கு
அள்ளிக் கொடுத்தோம் அர்ச்சனை மலர்கள்.

பொன் பொருள் இன்பமெல்லாம்
புவியிடைக் கிடைக்கு மெப்போதும்
எண் எழுத்து பொருள் ஏற்றமிகு
பண்தரு கல்வி பயனுறு நற்பண்பு
கொண்டெம் கல்லூரிக் கொள்கையினை
விண்புகழ் சேரக் காத்த வித்தகரே - உன்
புகழ் இவ் வுலகில் குறையாதிருக்க
உவந்தளித்தோம் அர்ச்சனை மலர்கள்.

நன்றியுடன்
வேலணை மத்திய மகா வித்தியாலய
பழைய மாணவர் சங்கம்
ஐக்கிய ராச்சியம்

படிப்பகம்

www.padippakam.com


# வைர மாளிகை



தாதியர் சீதைக்கு அழகு செய்தல்

அமிழ் இமைத் துணைகள் கண்ணுக்கு
அணி என் அமைக்கு மாபோல்
உமிழ் சுடர்க் கலன்கள் நங்கை
உருவினை மறைப்பது ஓரார்
அமிழ் தினைச் சுவை செய் தன்ன
அழகினுக்கு அழகு செய்தார்
இமிழ் திரைப் பரவை ஞாலம்
எழைமை உடைத்து மாதோ.

-கம்பராமாயணம்: கோலம்காண் படலம்

அழகினுக்கு அழகு செய்ய
லண்டனில் என்றும் நாட வேண்டிய இடம்

## வைர மாளிகை

## *DIAMONDS PALACE*

76 Tooting High Street
London SW17 0RN

**Tel: 020 8767 5333** Fax: 020 8772 7995


படிப்பகம்

www.padippakam.com

# முன்னைநாள் அதிபரின் வாழ்த்துக்கள்



வேலணை மத்திய மகா வித்தியாலயத்தில் பழைய மாணவர் சங்க லண்டன் கிளை தனது இவ்வருட ஒன்று கூடல் நிகழ்வின் போது வெளியிட இருக்கும் சங்கமம் எனும் மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன்.

தீவக வலயத்தின் குன்றின் விளக்கனைய கல்விப் பணி ஆற்றிய ஆற்றிக் கொண்டிருக்கும். வேலணை ம.ம. வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் ஓர் சிறப்பம்சமாக மலரும் "சங்கமம்" தொடர்ந்தும் மலர்ந்து கல்லூரியின் மணம் உலகெங்கும் பரவச் செய்யும் என்பது கல்லூரியுடன் தம்மை இணைத்துக் கொண்ட எல்லோருக்கும் பெருமகிழ்ச்சியையும் பெருமையையும் அளிப்பதாகும்.

தமக்குக் கல்வியறிவு ஊட்டிய இக் கல்லூரியின் பழைய மாணவர்கள் இன்று உலகின் பல பாகங்களிலும் பெயர் பெற்று சீரும் சிறப்புமாக வாழ்கின்றனர். இவர்கள் தம் கல்லூரி அன்னையை மறவாது, நெஞ்சில் இருத்தி, தமது பாடசாலை வாழ்க்கையின், இனிய நாட்களை நினைவு கூரவும், சகோதரத்துவத்தையும் உறவையும் பேணவும் அரிய சந்தர்ப்பமாக இந்த ஒன்று கூடல் நிகழ்வு அமையும் என நான் நினைக்கின்றேன்.

தீவகப் பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள மாணவர்கள் தமது உயர்கல்வியைப் பெறுவதற்காக வேலணை ம.ம. வித்தியாலயத்தில் கூடிக் கற்றது போன்று பிற நாட்டில் வாழுகின்ற இக் கல்லூரியின் பழைய மாணவர்கள் இத் தினத்தில் சங்கமித்து தமது அன்னையை நினைவு கூரும் வைபவத்தில் வெளியிடும் மலருக்கு "சங்கமம்" என்னும் பெயர் சாலப் பொருந்தும்.

இங்கிலாந்தில் வாழும் வேலணை ம. ம. வி. பழைய மாணவர்கள் தமக்கு அறிவூட்டிய கல்லூரி அன்னையையும், கல்வி புகட்டிய ஆசிரியர்களையும் கல்லூரியை நெறிப்படுத்திய அதிபர்களையும் மறவாதிருத்தல் இக்கல்லூரியில் கல்வி பயின்ற பழைய மாணவரின் சீரிய பண்பையும் மாசிலா அன்பையும் எடுத்தியம்புகிறது.

இச் சங்கம் மேன்மேலும் வளர்ந்து கல்லூரியின் புகழ் பரப்ப வேண்டும் என மனமார வாழ்த்துகிறேன்.

தலையாழி
யாழ்ப்பாணம்
1.7.2001

செ. குணபாலசிங்கம்
(முன்னைநாள் அதிபர்)

படிப்பகம்

www.padippakam.com


*With the*

*Best Compliments*

*from*



K. Krisnakumar & S. Thirunathan
(Old student of VMMV)

**Zep** Super Store
82 Whippendall Road
Watford
WD18 7LU
Tel: 01923 - 223227


படிப்பகம்

www.padippakam.com

## முன்னாள் உப அதிபரிடமிருந்து ....

தீவுப்பகுதியின் ஒளிவிளக்காம் வே. ம. ம வித்தியாலயம் அன்னையின் பழைய மாணவர் சங்க இலண்டன் கிளை தனது அமைப்பின் பத்தாவது ஆண்டு விழாவையும் "சங்கமம்" மலர் வெளியிடுவதையுமிட்டு பலகோடி வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். இவ்வேளையில் தாயகத்தில் அன்னையைச் சீரிய வழியில் இயங்க பல முயற்சியெடுத்த உங்கள் அனைவருக்கும் நன்றியும் எமது வாழ்த்துக்களும் உரித்தாகுக.

புலம் பெயர்ந்து அந்நிய நாட்டிலே வாழ்கின்ற போதும் தாயகத்தில் அன்னை காலத்துக்குக் காலம் இடம் மாறி ஓடிய போது உணர்ச்சியோடு உதவிய அனைவருக்கும் எமது பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம்.

தாயகத்தில் மீண்டும் தனது இல்லத்தில் வீற்றிருக்கும் அன்னையினதும் அங்கு கல்வி கற்கும் எம் சிறார்களதும் தேவைகள் பலப்பல வாழ்க்கைக்குத் தேவையான அனைத்துக் கல்வித்துறைகளிலும், அங்கு உடல், மன உளைச்சல்களுக்கு மத்தியில் வாழும் சிறார்கள் சிறந்து விளங்க ஊக்கமளியுங்கள் அன்னையின் பாதக் கமலங்களில் சிறுவர்கள் அன்போடும் பண்போடும் கல்விகற்று முன்னேற உங்கள் அனைத்து முயற்சி களும் வெற்றியளிப்பதாகுக.

அன்னையின் புதல்வர்களில் பலர் இலண்டனில் வாழ்கின்றார்கள். எல்லோர் மனதிலும் அன்னையினதும் அவள் தம் சிறார்களதும் தற்போதைய இக்கட்டான நிலையை உணரச் செய்து எல்லோராலுமியன்ற உதவிகளைச் செய்யுங்கள். சிவகாமி சமேத நடராஜப் பெருமான் எல்லோருக்கும் அருள்பாலிப்பாராக.

***திருமகள் கேதாரநாதன்***
முன்னாள் உப அதிபரும் பழைய மாணவியும்

## முன்னாள் தலைவரிடமிருந்து...

***Siva Aathithan B. Sc, M. phil,***
7 Grasdene Road, London SE18 2AS U.K.
Tel:020 8855 2896(Residence)
020 7922 8381 (Office)
Fax: 020 7928 0730(Office)
e-Mail:sivasampu.aathithan@kcl.oc.uk

வணக்கம்,

எமது அறிவுக்கண்களைத் திறந்து எம்மை வாழ்க்கைக்கு வடிவமைப்பது கல்லூரிகள். நாம் இன்று உலக சமுதாயத்தில் நல்ல மனிதர்களாகச் சிறந்து நிற்பதற்கு கருவியாக இருந்த எமது வேலணை மத்திய மகா வித்தியாலயத்தின் வளர்ச்சி, அதன் இன்றைய தேவைகளையும் உணர்ந்து நாம் ஒவ்வொருவரும் எம்மாலான பங்களிப்பை வழங்கி எமது கல்லூரி சார்ந்த சமூகத்தின் இன்றைய துயர் துடைக்க உதவுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

இப்படிக்கு
உங்கள் சேவைக்கும், அன்புக்கும் உரிய பழைய மாணவன் ஆசிரியன், நண்பன்
***சிவ ஆதித்தன்***
14- 07- 01

www.padippakam.com


விழா சிறப்புற

எமது வாழ்த்தரிய வாழ்த்துக்கள்

# STATION SUPERSTORE

எது மற்றவர்களிடம்
இல்லையோ அது எம்மிடம்
உண்டு. எது என அறிய
ஒரு முறை விஜயம் செய்து
பாருங்கள்.




**6 STATION PARADE,**
**EASTHAM**
**LONDON E6**

**020 8503 4711**


படிப்பகம்

www.padippakam.com

# வரப்புயர... தாங்கள் வளம் பல பெற...



தீவக மண்ணைச் செழிப்படையச் செய்ய வேண்டியது தீவாராலேயே செய்யப்பட வேண்டியது. தீவகத்தின் அபிவிருத்தி எமது கல்லூரியின் அபிவிருத்தியில் தங்கியுள்ளது. கல்லூரியின் அபிவிருத்தியானது, இக்கல்லூரியில் தம்மை அர்ப்பணித்துச் சேவை செயஸித அதிபர்கள் ஆசிரியர்களைத் தெய்வமெனப் போற்றிக் கல்விச் செல்வத்தை அள்ளிப் பருகிய பழைய மாணவர்களின் கைகளில் தங்கியுள்ளது. இவர்களில் சிறப்பிடம் பெறுபவர்கள் வெளிநாட்டுக் கிளையினர்.

இங்கிலாந்துக் கிளையினராகிய தாங்கள் சகல வழிகளிலும் முன் மாதிரியாகச் செயற்படுபவர்கள், செயற்படவேண்டியவர்கள். தாங்கள் தலைமை வகித்துச் சிறந்த திட்டங்களை உடன் வகுத்து ஒவ்வொரு கிளையினருடனும் தொடர்பு கொண்டு அவர்களின் ஒத்துழைப்பைப் பெற்று கல்லூரிக்குச் சகல வளங்களையும் வழங்கி குடாநாட்டு மாணவர்கள் முதல் ஏனைய பிரதேச மாணவர்களும் எமது கல்லூரி விடுதியில் த்ங்கியிருந்து மிக உயர்வான அறிவு திறன் மனப்பாங்கை பெறும் வகையில் எமது கல்லூரித்தாயை வளப்படுத்த வேண்டும் என்ற பேரவாவைத் தெரிவிக்கிறேன்.

இதற்கான இறையருளைத் தங்களனைவருக்கும் தர வேண்டும் என்று சிறீ சிவகாமி சமேத நடராசப் பெருமானை வேண்டுகிறேன்.

இவ்விருப்பை வெளிப்படுத்தச் சந்தர்ப்பத்தைத் தந்த தங்களுக்கு நன்றி கூறுகிறேன்.

சுந்தரம்பிள்ளை கலாதரன்
முன்னாள் அதிபர்- பழையமாணவன்

படிப்பகம்

www.padippakam.com


Best wishes
from

# SIVRAJ ENTERPRISES

இலங்கையில் இருந்தும் இந்தியாவில் இருந்தும் இறக்குமதி செய்யப்பட்ட சகல விதமான மளிகைப் பொருட்களையும், ஓடியோ சீடி கசட்டுக்களையும் தமிழ் சஞ்சிகைகள்,பத்திரிகைகள் ஆகியவற்றையும் எம்மிடம் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

லீலா தயாரிப்புகளின் ஏக விநியோகஸ்தர்கள்.

**114 Tooting High Street**
**London SW17 0RR**

**Tel: 020 8682 1677 Fax: 020 8767 0167**



*With Compliments*
*from*

# RAJU PATTNI & SON

Fine Jewellers
Pattni House,
58/60 Ealing Road
Wembley,
Middx, HA0 4TQ
Tel: 020 8903 6677/ 2859, 020 8902 0577
Fax: 020 8903 4887

எமது வாடிக்கையாளர்களுக்கு நல்வாழ்த்துக்கள்.

ராஜூ பட்னி அன் சன்ஸ்

www.padippakam.com



# பதில் அதிபரின் வாழ்த்துச் செய்தி

வேலணை மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கங்கள் பரந்துபட்ட உலகின் பல்வேறு நாடுகளிலும் இயங்கி பாடசாலையின் வளர்ச்சிக்காக ஆக்கபூர்வமாக செயற்பட்டு வருகின்றன். கனடா, பிரான்ஸ், ஐக்கிய இராச்சியம், சிட்னி, மெல்போர்ன், ஆகிய இடங்களில் செயற்படும் பழைய மாணவர் சங்கங்களின் செயற்பாடுகள் பெரிதும் பாராட்டுக்குரியவை.

இன்று வேலணை மத்திய மகா வித்தியாலயம் அதிபர் திரு.கு. கணேசலிங்கத்தின் தலைமையில் எத்தனையோ இடர்பாடுகளுக்கு மத்தியிலும் க.பொ. த (உ / த) வகுப்புகளை உள்ளடக்கியும் 750 மாணவர்களைக் கொண்டதாக தனது சொந்தக் கட்டடத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றது என்பது மகிழ்ச்சிக்குரியதே.

பழைய மாணவர் சங்கங்கள் இன்றைய நிலையில் பாடசாலை மாணவர்கட்கு புலமைப்பரிசில் வழங்கி, நூலக விருத்திக்கு உதவி, ஒலிவாங்கி, ஒலிபெருக்கி வானொலி, தொலைக்காட்சிப் பெட்டி, டெக் முதலானவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான நிதி உதவி அளித்து காலமறிந்து பேருதவி வழங்கி வருகின்றனர்.

ஐக்கிய இராச்சியத்திலே திரு.இ. சிவதாஸ் தலைமையில் இயங்கும் பழைய மாணவர் சங்கத்தினரின் ஒன்றுகூடல் வைபவமும், கலைநிகழ்வுகளும் சஞ்சிகை வெளியீடும் மிகச்சிறப்பாக நடைபெற எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பேருவகை அடைகிறேன்.

சங்கத்தினர் மென்மேலும் வளர்ச்சி பெற்று தாங்கள் கற்றுயர்ந்த கல்லூரி அன்னைக்கு சேவைகள் பல புரிந்திட அங்கு வீற்றிருக்கும் சிவகாமி சமேத நடராஜப் பெருமான் அருள்பாலித்திடுவார்.

வாழ்க, வளர்க நின்பணி

பொன். ஈசன் B.Sc.Dip in Ed.
பழைய மாணவன், முன்னாள்-ஆசிரியர், பிரதி அதிபர்
(வேலணை மத்திய மகா வித்தியாலயம்)

13. 06. 2001
கொழும்பு

படிப்பகம்

www.padippakam.com

# எமது கல்லூரியின் அதிபர்கள்

## (1945 - 2000)


A.K. Kandiah
(1945-1950


V. Thampoe
(1950-1963)


A.T. Sabaratnam
(1963-1965)


K. Sivasithamparam
(1965--1967)


J.S. Ariyaratnam
(1967--1971)


V. Ponnuthurai
(1971May-1971Dec)


V. Rasanayakam
(1971--1973)


S. Thiyagarajah
(1973--1974)


C. Gunabalasingam
(1974--1982)

எம் கலையகம் தலைநிமிரத்
தம்மை ஈர்ந்த பெருந்தகையாளர்கள்

படிப்பகம்

www.padippakam.com



K. Rasaih
(1982--1983)



M. Sivarajaratnam
(1983--1987)



S. Shanmuganathan
(1987--1989)



P. Ketharanathan
(1989--1993)



S. Kalatharan
(1993--1996)



K. Ganesalingam
(1997--Present)

**நன்றி: கலாதீபம் 2000**




எமது பாடசாலை

படிப்பகம்

www.padippakam.com


*With the Best Wishes*
*from*

## STOP & SHOP

Offlicence - News Agent - Groceries

104 High Street
Colliers wood
London SW19 2BT

Tel: 020 8540 6144
Fax: 020 8540 5260
Open 7Days A Week
7 AM Till 12PM

## EVER FRESH

**HALAL MEAT**

Tropical Fish

International Groceries

98 - 100 High Street
Coliiers Wood
London SW19 2BT

Open 7 Days A Week
7AM Till 12PM

# RATHY JEWELLERS



**28, Ealing Road**
**Wembley**
**Middx HA0 4TL**

Tel: 020 8903 3063
Fax: 020 8903 9711

Opening Hours: Mon - Sat 10a.m - 6.30 p.m & Sun 12 noon - 5.30 p.m


படிப்பகம்

# மண்ணின் நினைவுகள்



தீவகம் என்றொரு மண்ணினிலே பிறந்து வந்தோம்
அந்த சைவமண்ணிலே
தீவகம் என்று சொன்னவுடன் உயிர்மூச்சுப்பிறக்குது
எம் உதிரத்திலே
காலமெல்லாம் காத்திருந்து நாம் கட்டிக் காத்தோம்
வளர்பண்புதன்னை
கோலம் போட்டு முற்றத்திலே கோடி பொங்கல்
பொங்கியெல்லாம்
சூழவர்கள் சுற்றியிருந்து உவகை கொண்டு
உண்டு களித்தோம்
தீவகம்............

வயல் வெளியில் ஓடிவிழுந்து கிட்டியடி வாரோட்டம்
பயமின்றிக் கெந்திப்பிடித்து தள்ளிவிழுத்தி
புழுதிபுரண்டு தந்தையிடம்
தயவின்றி உதையும் வாங்கிப்பின்னே அன்னை
மடியில் விழுந்து ஆறி வந்தோம் தீவகம்
காலமெல்லாம் காத்திருந்து நம் சான்றோர் ஓடிக்களைத்து
கட்டிவைத்த கல்லூரி
ஈழமெல்லாம் பெருமை சேர்த்த இளவல்களை ஆக்கிநின்ற
இலக்கியம் படைத்த கல்லூரி
அதுதான் வேலணை மத்திய மகாவித்தியாலயம்
அதுதான் வேலணை மத்திய மகா வித்தியாலயம்
தீவகம்.............

ஆறாம் வகுப்பினில் ஆரம்பித்து ஆறுடன் ஏழுவருடம்
கற்றுவந்தோம்
கந்தையாவினில் ஆரம்பித்து தம்புபின்னே அரியரத்தினம்
ராசநாயகம் வரதலிங்கம் கேதாரம்வரை
விந்தை வளர்த்த அதிபருடன் ஆசிரியர்களும் வளர்த்து
பெருமை கண்ட கல்லூரி
சிந்தை கலங்கி நின்றோம் அதிபர் கேதாரநாதன்
மறைந்த சேதியுணர்ந்து
இந்த சோகம் மறையுமுன்னே நம் அன்புஅதிபர் அரியரத்தினம்
அரியரத்தினம் அமரராகி விட்டாரே
தந்தை இறந்ததுபோல் தவிக்க விட்டு அவருடன்
தமது நினைவில் எம்மை ஆழ்த்தி விட்டார்
தீவகம் .......

விந்தை அதிபர் கனேசலிங்கம் வாழிய வாழியவே......
எழுவைதீவு, நயினாதீவு,நெடுந்தீவு, அனலைதீவு
புங்குடுதீவு மக்களெல்லாம்
வேலணை மண்ணில் கல்விகற்று ஒற்றுமையுடன்
உணர்வு கண்டார்
ஐயையோ ஐயையோ ஆடிப்பாடி ஓடிநின்ற
ஆட்டமெல்லாம் அடங்கிப்போச்சு
நஞ்சகர்கள் வந்திறங்கியஎம் மண்ணைப்புரட்டி
விட்டார்கள்
இருந்த சொத்தும் போயாச்சு எருக்கலை மரமும் வளர்ந்தாச்சு
வந்துவிட்டோம் வெளிநாடு ஆனால் மறக்கலாமோ
அந்த மண்ணின் மக்கள் தன்னை
உண்ண உணவுகிடைக்காமல் உடுக்க உடையும்
இல்லாமல் உதிரம் வற்றி வாழுகின்ற
கண்ணை யொத்த மக்கள் எல்லாம் கரைசேர்ந்திட
கை கொடுப்போம்
கண்ணை யொத்த மக்கள் எல்லாம் கரைசேர்ந்திட
கை கொடுப்போம்
மீண்டும் வேலணை சென்றிடுவோம் வீரமுழக்கம் பாடி
புகழ் பாடிடுவோம் பாடசாலை புகழ் பாடிடுவோம்.
......... தீவகம் ..........

www.padippakam.com


# SKY WINGS LTD

## TRAVEL AGENTS
## WORLDWIDE

119 Tooting High Street, London SW17 0SY
Book with confidence.

24Hour Ticketing

**MAIN AGENT FOR**

AIR-INDIA

ROYAL JORDANIAN

SriLankan

## TRY US FOR THE BEST FARE

*Call : Bala, Shankar or Dash*

**Visa Services are available for India, USA, Canada and many other Destinations**

**Tel : 020 8672 9111** (12 Lines)
**Mobile : 07850 876921**
**Fax : 020 8672 0951**
Visit our web site www.skywings.co.uk
E-mail: bala@skywings.co.uk.

ATOL
3782

IATA


படிப்பகம்

www.padippakam.com



## யாழ்வளாக துணை வேந்தரின் வாழ்த்துச்செய்தி

வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர்களின் லண்டன் கிளை உறுப்பினர்கள் ஒன்று கூடல் நிகழ்ச்சி நடத்துவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இந் நிகழ்ச்சி இக் கல்லூரியின் பழைய மாணவர்களை ஒன்றிணைத்து, கல்லூரியை மீளக்கட்டி எழுப்புவதற்குப் பெரிதும் உதவியாக அமையும்.

வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகாவித்தியாலயம் 1940 களில் ஆரம்பித்து 1980களில் உச்சநிலையை அடைந்து 1991 இல் தீவுப் பகுதி மக்களின் இடப்பெயர்வின் பின்னர் கல்லூரி இடம்பெயர்ந்தது, யாழ்ப்பாணத்திலும், சாவகச்சேரியிலும் இயங்கி வந்தது. இக்காலத்தில் கல்லூரி பெரும் பாதிப்புக்களைச் சந்தித்தது,

1996 இல் வேலணை சரஸ்வதியில் இக்கல்லூரியை மீண்டும் ஆரம்பித்து 1998 இல் மீளவும், பழைய இடத்தில் அது செயற்பட ஆரம்பித்தது. மாணவர் எண்ணிக்கை குறைவாக இருப்பதுடன், பௌதீக வசதிகளும் மிகவும் தாழ்நிலையில் காணப்படுகிறது. ஆசிரிய வளமும் அதே நிலையில் தான். இன்றைய அதிபர் திரு. கணேசலிங்கம் அவர்களின் விடாமுயற்சி காரணமாக, கல்லூரி பிரச்சனைகள் மத்தியில் இயங்கி வருகிறது. ஆகவே கல்லூரியின் பழைய மாணவர்கள், கல்லூரியின் கல்விச் செயற்பாடு களுக்குத் துணை நிற்பது கட்டாய தேவையாகும். வேலணைக் கிராமத்தைச் சேர்ந்தவன் என்ற ரீதியில் இக் கல்லூரியின் வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாடு எனக்கு உண்டு.

இக்கல்லூரியின் வளர்ச்சி தீவுப் பகுதியின் வளர்ச்சிக்குப் பெரும் பங்கு வகிக்கும்.

**பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை**
துணை வேந்தர்
யாழ் பல்கலைக்கழகம்.

## Message from the Retired Deputy Principal

It is indeed with great pleasure that I send this message for the souvenir "Sangamam" to be published by Sir Waitialingam Duraiswamy M.M. Old Student Association - London.

A School that has celebrated its Golden Jubilee has helped and forstered a good number of students in the field of education. I am very happy to note that most of them are doing very well in life all over the world.

I am highly impressed to note the old students who are living abroad have organised associations wherever they settle and are actively engaged in the welfare and progress of their Alma mater.

This School which we are proud of is now facing immense problems due to the on going ethnic problem in the country. The building up of the institution depends in the hands of the old students who are doing well in life. I am sure the old students will not fail to do their duty to their Alma Mater.

I will fail in my duty if I don't thank God for the opportunity given to me to serve in a school of this calibre both as an assistant teacher and Deputy Principal for over seventeen years.

I external my best wishes to "Sangamam" to grow up well and render service to their School, country and to the entire world.

14 Atapattu Road
Off Quarry Road,
Dehiwala

***R.T. Ehambaranathan B.A(Ecno)***
Retired Deputy Principal

லண்டனில் தமிழர்கள் விரும்பிச் செல்லும் உணவகம்

# சுவை அருவி

**SRILANKAN - SOUTH INDIAN RESTURANT**

ஏழு நாட்களும் காலை 11 மணி முதல் நள்ளிரவு 12 மணி வரைதிறந்திருக்கும்

100 இடியப்பம் + சொதி + சம்பலுடன் £ 15.00

Take - Away முன்னதாக ஓடர் செய்வது நல்லது.

கொண்டாட்டங்களுக்குத் தேவையான சகலவிதமான அறுசுவை உணவு வகைகள் ஓடருக்குத் தயாரித்து வழங்கப்படும்.

சுத்தமான சுடச் சுட ஆகாரங்கள் ஆற அமர்ந்து குடுமபத்தோடு ருசித்து சுவைத்துச் சாப்பிடலாம் வாருங்கள்

# *SUVAI ARUVI*

96 High Street, Collierswood, London SW19

**Tel: 020 8286 6677 / 020 8543 6266**

# RUBY'S

**THE NATIONAL LOTTERY**

# Food Store & Off Licence

*PRICE REDUCTIONS ON MANY VARIETIES OF SRI LANKAN FOOD PRODUCTS* including Rice flour,Rice, Fish etc. Fresh Sri Lankan Vegetables available daily. Daily fresh Sri Lankan snacks and Many more items you expect from a Sri Lankan Shop.

Sri Lankan Sunday newspaprs available on the same day.

We open every day till late

52 High Street,
Southall, Middlesex.

Tel: 020 8813 9663

www.padippakam.com

*With the Best Compliments*

*from*



*Kulaveerasingam Family*

# LONDIS SKM BROTHERS

9 - 10, Dunpoyne Road
Hampsted, London NW3 2YY

# PALM BEACH

SRILANKAN AND SOUTH INDIAN RESTAURANT

சுவை மிக்க உணவுகளைத் தரத்தோடு மீண்டும் மீண்டும் சுவைக்கத்தூண்டும்
ஓர் அற்புத உணவகம், உங்கள் தேவைக்கேற்ப சகலவிதமானஅறுசுவை
உணவுகள் அனைத்தையும் சுடச் சுட குடும்பத்தோடு ருசித்து சுவைத்திட
இன்றே வாருங்கள். உங்கள் வைபவங்கள் எதுவானாலும் உங்கள் தேவைக்கேற்ப
அறுசுவை உணவுகளைத் தயாரித்து பரிமாறக் காத்திருக்கிறோம்.

£25 செலவுசெய்தால் 10%
£25 + செலவுசெய்தால் 15% தள்ளுபடியும் தரப்படும்.
இன்றே அழையுங்கள்:

**020 8900 8664**

தயவு செய்து நீங்கள் வரும் பொழுது இந்த கூப்பணையும் கொண்டுவரவும்

Open From : 12.00 pm to 3pm and 6.00pm to 11.30pm
7 days a week
17, Ealing Road, Wembley, Middlesex HA0 4AA

**Tel: 020 8900 8664**

படிப்பகம்

www.padippakam.com


# DUVARAKA

**CASH & CARRY**





199 The Broadway
Southall Middx

Tel: 020 8813 9126
Fax: 020 8574 2899

# PALM BEACH

**SRILANKAN AND SOUTH INDIAN RESTAURANT**

சுவை மிக்க உணவுகளைத் தரத்தோடு மீண்டும் மீண்டும் சுவைக்கத் தூண்டும் ஓர் அற்புத உணவகம், உங்கள் தேவைக்கேற்ப சகலவிதமான அறுசுவை உணவுகள் அணைத்தையும் சுடச் சுட குடும்பத்தோடு ருசித்து சுவைத்திட இன்றே வாருங்கள். உங்கள் வைபவங்கள் எதுவானாலும் உங்கள் தேவைக்கேற்ப அறுசுவை உணவுகளைத் தயாரித்துப் பரிமாறக் காத்திருக்கிறோம்.

£25 செலவுசெய்தால் 10%
£25 + செலவுசெய்தால் 15% தள்ளுபடியும் தரப்படும்.

இன்றே அழையுங்கள்:

**020 8900 8664**

தயவு செய்து நீங்கள் வரும் பொழுது இந்த கூப்பனையும் கொண்டு வரவும்

Open From : 12.00 pm to 3pm and 6.00pm to 11.30pm
7 days a week
17, Ealing Road, Wembley, Middlesex HA0 4AA

**Tel: 020 8900 8664**


படிப்பகம்

www.padippakam.com

# உதவி ஆசிரியர் பார்வையில்...



## அறிவு ஆற்றலை ஊட்டிய அன்னைக்கு

இலங்கையின் வடபுலம் தமிழர்களின் கலாச்சார தலைநகரமாம் யாழ்ப்பாணத்திற்கு தெற்கே சப்த தீவுகளின் நடுநாயகமாக விளங்கும் லைடன் தீவின் மத்தியில் கம்பீரமாக எழுந்து நிற்கும் எமது கலைத்தாயின் முழுவடிவமாக தனக்கே உரித்தான பாணியில் வரவேற்கும் எமது பாடசாலை சுமார் 50 ஆண்டுகளையும் தாண்டி தனது கல்விச் சேவையை தனது புதல்வர்களுக்கு அள்ளி வழங்கி வருகின்றாள். அவ்வப்போது சில, பல இடர்வரினும் சற்றும் சளைக்காமல் தனது புதல்வர்களுக்கு துறைசார் கல்வி, கலாச்சாரம் நற்பழக்க வழக்கங்கள் மற்றும் விளையாட்டுத் துறை போன்றவற்றை ஒவ்வொரு மாணவர்கட்கும் தனது கருணை மிக்க சேவையை வழங்கினாள்.

அப்படிப்பட்ட கருணைத் தாயின் சேவையை மேன்மேலும் சீரும் சிறப்புடனும் தொடர்ந்திட இத் தாயின் பழைய மாணவர்கள் ஒவ்வொருவரும் தாம் எங்கெல்லாம் பரந்துபட்டு வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் சேவை வழங்கிட பழைய மாணவர் சங்கங்களை உருவாக்கி அந்தத் தாயின் தேவைகளை அறிந்து தம்மாலான உதவிகளை வழங்கி வருகின்றார்கள் என்பது கண்கூடு. அந்த வகையில் ஐக்கிய ராச்சியத்திலும் பழைய மாணவர்கள் ஒன்று சேர்ந்து 1987ம் ஆண்டு இப் பழைய மாணவர் சங்கம் உருவாக்கப்பட்டது.

இது 14 ஆண்டுகளாக தனது மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளை ஆற்றி எமது தாய்க்கு பெருமை சேர்ந்திருக்கின்றது. தனது சேவையைத் தேவை அறிந்து செயற்பட அதற்கு புது இரத்தம் ஊட்டப்பட்டு 2000ஆண்டில் புதிய தலைமையின் கீழ் சிரத்தையுடன் புதியதோர் நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டு சிறப்பான நிர்வாகத்தை உருவாக்கி இன்று இயன்றளவு எல்லா பழைய மாணவர்களையும் ஒன்று சேர்த்து சிறப்பான ஒன்று கூடல் நிகழ்ச்சி நடைபெறுகின்றது.

இந்நிலையில் எமது பாடசாலையின் மூலம் கல்வி அறிவை ஊட்டி என்னையும் உயர் கல்வி கற்க வைத்து சமுதாயத்தில் ஒரு மனிதனாக்கிய தாயின் சேவை மேலும் மேலும் சிறப்புற தொடர்ந்திட வாழ்த்துகின்றேன். மேலும் எமது பாடசாலையில் பணியாற்றிய, பணியாற்றிக் கொண்டிருக்கும் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்கள் சேவையும் தற்போது நினைவு கூர்வது அவசியம்.

இச்சங்கம் இதழை வெளியிடுவதில் மலர்க்குழு சார்பாக பெருமகிழ்ச்சியடைகின்றேன். இம்மலரில் சொற்பிழை, பொருட்பிழை இருப்பின் பெருமனதுடன் யாவற்றையும் ஏற்று எமது இப்பணி தொடர உங்கள் பேராதரவை அள்ளி வழங்குங்கள் என்று பணிவன்புடன் வேண்டி நிற்கின்றேன்.

நன்றி.

***T. திருக்குமாரன்***
B.B.A (Hons)
பழையமாணவன்

படிப்பகம்

www.padippakam.com


2001ம்
ஆண்டு
சங்கமம் பொலிவுற
எங்கள் வாழ்த்துக்கள்



*Mr.Jeyarooban*

**VICTORIA FOOD & WINE**
573 High Street Road
Leytonstone
London E11 4PB

**Tel: 020 8539 8009**


படிப்பகம்

www.padippakam.com

# சங்கமமே வாழ்க..........

கடல் சூழ்ந்த இலங்கைத் தீவினிலே
ஆழி சூழும் ஏழுதீவும் அறிவு காண
தேடி வந்த அரும் பெரும் அறிவாளிகளாக
தேசம் போற்ற பெற்றெடுத்த பெருமைதனை,
உலகுக்கு உணர்த்திய வேலணை மத்திய
மகா வித்தியாலயமே நீ வாழ்கவே!

கல்வி கற்க வசதியின்றி வாடிச்சோர்ந்து
நின்ற தீவகத்து மக்களுக்கு,
உதயசூரியன் போல் காட்சி கொடுத்தாயே!
உன் ஒளிபட்டு துளிர்விடும் பச்சைப்
புல் போலவும் பூத்துக்குலுங்கும் பூக்கள்
போன்றும் அறிவுச்சுடர் ஒளி பெற்ற
எம் சிறார்கள் உலகெங்கும் புகழ்
பெருக்க வைத்த வேலணை
மத்திய மகா வித்தியாலயமே
உன் புகழ் வாழ்கவே!

காலப் போக்கினிலே பற்பல வித்துவம்
கொண்ட அதிபர்களைக் கவர்ந்து கொண்டாய்
பெயருக்கு அதிபர்கள் அன்றி
தீவகத்தின் பெரும் சிறப்பினை
உலகுக்கு உயர்த்த வந்த பெரியர்தனை
எப்படி நீ பெற்றெடுத்தாய் உலகினிலே
எம் சிறுவர் புகழ் மிக்கோர் என்று
சொல்ல எப்படித்தான் வழி செய்தாய்
உன் பெருமை பாடாத ஊரில்லை
பாரினிலே வேலணை மத்திய மகா வித்தியாலயம்
என்று அழைத்திடும் தாயே நீ வாழ்கவே!



வேலணை மத்திய மகா வித்தியாலயம்
பெற்றெடுத்த அரும் பெரும்
பொக்கிஷம் போன்ற இளம்
சந்ததியினரின் புகழ் மிக்க
பட்டம் பதவிகளைப் பாரெல்லாம்.
போற்ற வைத்த பெருமை தனை
துலங்க வைத்த வேலணையூர் மத்திய மகா வித்தியாலயமே
நின் புகழ் வாழ்கவே.

உலகுள்ள வரையும் உன்புகழ்
பரப்பி நிற்க உந்தன்
அறிவுச்சுடர் செல்வங்கள்
எந்தெந்த நாட்டினிலோ
நின் புகழ் பூத்த நினைவுகளை
ஏற்றி யேற்றிப் பாடுவரே
இச் சிறப்பை நீ பார்த்தும்
கேட்டும் அகத்தினிலே
புன் சிரிப்புக் கொண்டு
சங்கமமும் வாழ்க வளர்க
என்றும் வாழ்த்திடுவாய்
வேலணை மத்திய மகாவித்தியாலயமே
நின் புகழ் வளர்க வாழ்க வாழ்க வாழ்கவே

வணக்கம்

“அறிவு ஒளியே வழிகாட்டு”
“வாழ்க! வளர்க! நின் பணி”
அன்பு மறவாத பழைய ஆசிரியை
திருமதி தையல் நாயகி மாணிக்கவாசகம்பிள்ளை

www.padippakam.com


# ANGLO ASIAN MINI MART

மேலும் விஸ்தரிக்கப்பட்டு புதுப் பொலிவுடன்
காட்சியளிக்கின்றது.

அனைத்து வகையான நவீனரக உடுபுடவை வகைகள்
குழந்தைகளுக்குத் தேவையான ரெடிமேட் உடுப்புகள்
திருமண வைபவத்திற்குத் தேவையான தலைப்பாகை, பட்டு
வேட்டி சால்வை, அலங்காரப் பொருட்கள், கூந்தல் சோடினைகள்,
திரவியப் பொருட்கள்.
இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பசுமையான மரக்கறி
வகைகள், சமையலறைப் பாத்திரங்கள்.



*Anglo Asian Mini Mart*

Specialists in Sri Lanka Groceries & Off Licence

K. THAYAPARAN

513 High Road Wembley,
Middx, HA0 4AG

Tel: 020 8900 2451

Mobile: 07956 425 707 Fax: 020 8903 8202

www.padippakam.com



1.11.2000 அன்று நடைபெற்ற பரிசளிப்பு விழாவின் போது கௌரவ விருந்தினராகக் கௌரவிக்கப்பட்ட எமது முன்னாள் ஆசிரியர் திரு ப.சந்திரசேகரம் அவர்கள் மங்கள விளக்கேற்றுகின்றார். திரு ப.சந்திரசேகரம் அவர்கள் இசைத்துறைக்கு ஆற்றிய சேவைக்காக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் M.A பட்டம் கொடுத்து கௌரவித்தது.



2000ம் ஆண்டில் புனரமைப்புச் செய்யப்பட்ட கனிஷ்ட விஞ்ஞான அறை.



1.11.2000 பரிசளிப்பு விழாவின் போது உதவிக்கல்விப்பணிப்பாளர் திரு மகேஸ்வரன் அவர்கட்கு பிரதி அதிபர் திரு பரமேஸ்வரன் அவர்கள் மலர்மாலை அணிவிக்கும் காட்சி

படிப்பகம்

www.padippakam.com



24.02.2001 இல் நடைபெற்ற வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டியில் எமது வேலணைக் கோட்டக் கல்விப்பணிப்பாளர் திரு எஸ் தில்லைநாதன் அவர்கள் சான்றிதழ் வழங்குகிறார்.



கற்பித்தல் உபகரணங்களில் overhead projector ஒன்றை வேலணை பிரதேச செயலர் திரு செ.இரத்தினம் இயக்கி வைக்கிறார்.



முன்னாள் அதிபர்கள் திரு இராசநாயகம், திரு குணபாலசிங்கம் அவர்கள் கௌரவிக்கப்படுகிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com

# பேராசிரியரின் வாழ்த்துரை



நம்மை வளர்த்து எடுத்து ஆளாக்கிய நமது கல்லூரி அன்னைக்கு எடுக்கும் மலர் வெளியீட்டுக்கு எனது வாழ்த்தினை வழங்குவதில் சந்தோஷமடைகின்றேன். வருடந்தோறும் இம்மலர் வெளியிடப்பட வேண்டும் எனவும் விரும்புகின்றேன்.

கனடாவில் வாழ்கின்ற எமது கல்லூரி பழைய மாணவர்கள் கல்லூரி நினைவாக ஒரு மலர் வெளியிடப்பட வேண்டும், ஒரு நல்ல பெயர் கூறுமாறு கேட்டார்கள். நானும் "கலாதீபம்" என்று பெயர் வைத்தேன்,தொடர்ந்து வெளிவந்தது. இப்போது அப்பெயரை மாற்ற வேண்டும் என்று கூறுகின்றார்கள். இது கல்லூரியின் ஒரு மூத்த மாணவனுக்கு செய்யும் அப்பட்டமான துரோகமாகும்.

இவ்வாறு இல்லாமல் லண்டன் வாழ் பழைய மாணவர்கள் ஒற்றுமையாகவும், ஆக்கபூர்வமான சிந்தனையுடனும் செயற்பட வேண்டும் என விரும்புகின்றேன். எம்முடைய வரலாற்றில் நாம் ஒற்றுமையாக இருந்ததில்லை. அதனால் தான் இன்று எம்முடைய நிலை பரிதாபத்துக்குரியதாக இருக்கின்றது. இங்கிருந்து இடம்பெயர்ந்து உலக நாடுகளிலும் வாழும் தமிழரும் ஒற்றுமையாக இல்லை. ஒற்றுமையாக வாழவேண்டும். அதற்கு எனது வாழ்த்துக்கள்.

வேலணை மத்திய கல்லூரிக்கு அடிக்கடி நான் போய் வருகின்றேன். அதிபரும், ஆசிரியர்களும் மிகவும் கஸ்ரப்படுகிறார்கள். படிக்கின்ற பிள்ளைகளோ மிகவும் வருமான ரீதியில் தாழ்மட்டப் பெற்றோர்களின் பிள்ளைகள். அவர்களுக்கு நிதியுதவி செய்ய வேண்டும். இதற்கு எமது பழைய மாணவர்கள் கட்டாயம் முயற்சிக்க வேண்டும். செய்வார்கள் என எதிர்பார்க்கின்றேன். வேலணை மற்றும் சுற்றுப்புறக் கிராமங்களின் வீடுகளில் எல்லாம் ஓடுகளும், கதவு நிலைகளும் களவு போகின்றது. பயன்தரு மரங்கள் அழிக்கப்படுகின்றன. கள்ளரும் சந்தர்ப்பவாதிகளும் வாழுமிடமாகப் போய்விட்டது. இப்போதைக்கு இந்த நிலை மாறாது. கல்லூரியின் சுற்றாடலிலும் விடுதியிலும் இராணுவம் இருக்கின்றது. இந்த நிலையும் மாறாது நாம் பழைய நிலையை நினைத்துச் சந்தோசப்படுகின்றோம். நமது பழைய மாணவர்கள் கல்லூரியை மறக்கவில்லை. பழைய நிலையை ஞாபகத்தில் கொண்டு கல்லூரி அன்னைக்கு விழா எடுத்தும் மலர் வெளியிட்டும் நிதியுதவி செய்தும் சந்தோஷமடைகிறார்கள். இது தொடரட்டும்.

இவை எல்லாவற்றையும் மனதிற் கொண்டு "சங்கமம்" என்ற கல்லூரி இதழுக்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவிக்க விரும்புகின்றேன்.

*பேராசிரியர். செல்லத்துரை பாலச்சந்திரன்*
*புவியியற் பேராசிரியர்*
*பீடாதிபதி, கலைப்பீடம்*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*
*இலங்கை.*

படிப்பகம்

www.padippakam.com


*With the Best Compliments*

*from*



*Mr Murugaverl*

# FOOD & WINE

402 Barking Road

East Ham

London E6

**Tel: 020 8471 2954**


படிப்பகம்

www.padippakam.com

# J/ VELANI SIR WYTHIALINGAM DURAISWAMY
## **MADHYA MAHA VIDYALAYAM** (Velani Central College)
## Old Students Association Colombo Branch



யா / வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி
மத்திய மகா வித்தியாலயம (வேலணை மத்திய கல்லூரி)
பழைய மாணவர் சங்கம் - கொழும்பு -கிளை


112 - 1/1, Sri Kathiresan Street
Colmbo -13
Sri Lanka.

Regd, No. S. 5401
T' phone: 433355, 434468, 449843
Fax : 433354



Patrons:
Mrs. T. Ketharanathan
Retired Principal
Mr. S. P. Samy
Mr. N. Veerasingam

President:
Mr. R. Sundaramurthy
Retired Deputy Director of Customs

Vice Presidents:
Mr. S. Kalatharan
Asst. Director of Education

Dr. V. Kangai Verniyan

Mr. A. Sri Selvam
Chief Inspector of Police

Secretary:
Mr. S. Shanmuganathan
B.A.F (Hons)

Asst. Secretary:
Mr. S. Thayaparan
Retired Courts Clerk

Treasurer:
Mr. M.T.Arunthavanathan

Asst. Treasurer:
Mr. S. Raviendran


## வாழ்த்துச்செய்தி

வேலணை மத்திய மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க ஐக்கிய இராச்சியக் கிளையினரால் 2001 ம் ஆண்டிற்கான ஒன்று கூடல் நிகழ்வும் இதை ஒட்டிய மலர் வெளியீடும் இடம்பெற இருப்பதையிட்டு வேலணை மத்திய மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளையினராகிய நாம் பெருமகிழ்ச்சி அடைவதோடு இம்மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பெருமைப்படுகின்றோம்.

ஊர் விட்டு, நகரை விட்டு, நாட்டை விட்டு, ஓடிச் சிதறிக் கிடக்கும் நாங்கள் ஊரின் நினைவோடு, நகரின் நினைவோடு, நாட்டின் நினைவோடு எல்லாவற்றிற்கும் மேலாக எமது கல்லூரித் தாயின் நினைவோடு ஒன்றியுள்ளோம்.

எமது கல்லூரியை பேணுவதிலும் அதனைச் செழுமைப் படுத்துவதிலும் எமது கல்லூரியின் ஏனைய பழைய மாணவர் சங்கக் கிளையினர் போல் தங்கள் சங்கமும் தொடர்ந்து இன்னும் சிறப்பாக பணியாற்ற வேண்டுகின்றோம்.

என்றோ ஒரு நாள் நாம் எல்லோரும் எமது கல்லூரித் திடலில் ஒன்று கூடுவோம் என்ற நம்பிக்கையோடு அதுவரை எங்கள் கல்லூரித் தாய் தந்த அறிவுச் செல்வத்தை வளர்த்திக் கொண்டே தங்களது சிறிய நற்பணி தொடர வாழ்த்துகின்றோம்.

சி. தயாபரன்
உப. செயலாளர்.

படிப்பகம்

www.padippakam.com

*With the best Compliments*
*from*



T. Ganeswaran

# Sitka Services

Birmingham

*With the best Compliments*
*from*



*Balachandran Family*

*COST CUTTER SUPER MARKET LTD,*

439 Kenton Road Kenton

படிப்பகம்

www.padippakam.com


# வேலணை மத்திய மகா வித்தியாலயம்

பழைய மாணவர் சங்கம் - கனடா

**VELANAI MADYA MAHA VIDYALAYAM**

OLD STUDENTS' ASSOCIATION - CANADA

(A REGISTERED NON - PROFIT ORGANZATION)

Tel: (416)287 - 1439 24 Henbury Place

Fax: (416)742- 8486 Toronto, On M1B 2S8



Patron
Dr. K. Sittampalam
Mr. T. Nadarajah
Mr. K.Sivaramalingam
Mr. A. Ariaratnam
Dr. P. Vimalendran

President
Mr. V. Sivanathan

Vice President
Mr.T. Kandiah

Hon. Secretary
Mr T.Kirupaneshan

Asst. Secretary
T. Sriharan

Hon. Treasurer
Mrs. L. Arulalingam

Committee Members
Mr. M. Shanmuganathan
Mr. N. Kandavel
Mr. N. Perinpanathan.
Mr. P. Yoganathan
Mr. K. Thanapalasingam
Mr. Soma Satchithanathan
Mr. K. Parthipan
Mrs. S. Selvarajah
Mrs. K.Sivapalan
Mrs.S. Varthevan

Hon. Auditor
Mr. K. Sithiravadivel




*July 01, 2001*

*On behalf of J/Velanai MMV Old Students Association, Canada,*

*I am pleased to extend greetings on your 2001 Celebration.*

*Our Associations around the globe are not only focused to the needs and growth of the School, they are also providing social and cultural opportunities for alumni and their families, most importantly to the young - ones who are far - away from their heritage. A worthy effort to remember and resurrect the glory.*

*Please accept my best wishes for SANGAMAM- 2001*

*yours cordially,*

*Sivanthan Vaithilingam.*

படிப்பகம்

www.padippakam.com

*with the Best Compliments*

*from*



*Pararajasingam Family*

**NEW JERSEY FAST FOOD**

படிப்பகம்

www.padippakam.com

# ASSOCIATION DES ANCIENS ELEVES DU COLLEGE CENTRAL DE VELANAI ( ASSECVEL)

## வேலணை மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் - பிரான்ஸ்


Patrons:
Mr. S. Karalapillai
Mrs. S. Suntharalingam

President:
Mr. N. Mahendran

Secretary:
Mr. Y. Balakrishnan

Vice- President:
Mr. A. Tevathasan

Asst. Secretary:
Mrs. Kalaivani Theivendran

Treasurer:
Mr. Su. Karunanithy

Commitee Members:
Mr. S. Sripaskaran
Mr. Y. Padmanathan
Mr. A. Jeyagugan
Mr. P. kanthappillai
Mr. M. Ketheeswaran
Mrs. B. Sakunthalathevy
Mr Balasubramaniam

Auditor:
Mr.S. Suntharalingam


அன்புடையீர்!

"சங்கமம் 2001" சிறப்புற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி இந்நிகழ்வை நடாத்தும் நிர்வாகக் குழுவினருடன் அனைத்துப் பழைய மாணவ, மாணவிகளும் ஒன்றாக கைகோர்த்து எங்கள் கல்லூரிக்கும் அதன் நிகழ்கால மாணவர்களுக்கும் ஏனைய பழைய மாணவர்களுக்கும் அருஞ் சேவை ஆற்ற வேண்டும் என கேட்டுக் கொள்வதுடன் மேலும் பலர் சங்கத்தில் இணைந்து தங்கள் ஆற்றல்களை வழங்க முன் வருவார்கள் எனவும் திடமாக நம்புகிறோம்.

பிரித்தானியக் கிளையும் ஏனைய நாடுகளிலுள்ள கிளைகளுடன் தொடர்புகளை மேலும் விரிவுபடுத்தி தொடர்ந்தும் கல்லூரி அபிவிருத்திக்கு உதவவேண்டும் என்பது எங்கள் அவா.

இவ்விடயத்தில் பாரிஸ் கிளை என்றும் போல் உறுதுணையாகவிருக்கும் என்பதைக் கூறிக்கொள்கிறோம்.

என்றும் தோழமையுடன்

பாரிஸ் கிளை நிர்வாக சபையினர்


ASSECVEL, 73, rue Doudeauville, 75018 Paris, France. Tel:01 42 51 29 92 Fax: 01 42 51 35 25
Association enregistre sous la Loi 1901 - no d'ordre: 93/0949


படிப்பகம்

www.padippakam.com

*With the*

*Best Compliments*

*from*



*T.Jeyakumaran*

*(Old student of VMMV)*

# Home Needs Super Store(Londis)

1086 Uxbridge Road

Hays

Middx

UB4 0RJ

Tel: 020 8573 0645

படிப்பகம்

www.padippakam.com

# அவுஸ்திரேலியா கிளைத்தலைவரிடமிருந்து...........



இன்றைய காலகட்டத்தில், எமது நாட்டில், முக்கியமாக எம் தீவகத்தில் வாழும் மக்கள் எத்தனையோ இன்னல்களை எதிர்நோக்குகின்றனர். அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவது. எமது தலையாய கடமைகளில் ஒன்றாகும். அவர்தம், இருப்பிடம்,உணவு, உடை, கல்வி என்பன தொடர்ந்து பாதிப்புக்குள்ளாகி அவர்கள் அல்லலுறுகின்றனர். இவற்றில் சிலவற்றையாவது நாம் குறைத்து வருகின்றோம்.

வேலணை மத்திய மகாவித்தியாலயத்தில் காலடி வைத்த எந்த மாணவனுமே, நன்றியுணர்வுடன் கடமை செய்யப் பின்னிற்பதில்லை. இதற்கு எடுத்துக்காட்டாக, இடம்பெயர்ந்து வாழும் எம்கல்லூரியின் பழைய மாணவர்கள், தாம் வாழும் நாடுகளில் பழைய மாணவர் சங்கங்களை உருவாக்கி அயராது பாடுபட்டு வருகின்றனர்.

இதில் "பிரித்தானியாக்கிளை" ஓர் சிறந்த எடுத்துக்காட்டு இக்கிளையின் அங்கத்தவர் யாவரும் எம் சகோதரர்களின் தேவைகளையறிந்து செவ்வனே செயற்பட்டு வருகின்றனர். அவர்களுக்கு எனது பாராட்டுக்கள்.!

எதிர்வரும் ஆடிமாதம் 14ம் திகதி நடைபெறவிருக்கும் ஒன்று கூடல் இனிதே நடைபெறவும், ஆக்கபூர்வமாக அமையவும் எனது நல்லாசிகள் உரித்தாகுக. விழாவில் உலாவர இருக்கும் "சங்கமம்" சிறப்பு மலர் முழுமையானதாகவும், சிறப்புற்றும் மிளிர என் இனிய வாழ்த்துக்கள்.

உங்கள் சேவை, இடையூறுகள் எதுவுமின்றி என்றும் தொடரவும், ஆண்டுக்கு ஆண்டு புதுப்பொலிவுடன் வளர்ச்சி பெறவும், எல்லாம் வல்ல பகவானை மனமார வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

அன்புடன்

**V.N. சிவஞானம்.**

படிப்பகம்

www.padippakam.com


With best Compliments

from



*ACCOUNTANCY SOLUTION*
*&*
*FINANCIAL SERVICES*

23 - 25 Down way
Northalt
Middx UB5 6PG

**Tel: 020 8845 1033**

Fax: 020 8842 0559

E.mail- accountancy.solution@btinternet.com

Contact: Kumar


படிப்பகம்

www.padippakam.com

# A BRIEF HISTORY OF OUR COLLEGE

Updated Version S. Elancheliyan

## *LOCATION*

**Velanai Madya Maha Vidyalayam**, which is situated at velanai, has been a gateway for the development of educational, cultural, and scientific features of the people who are the residents of the Islands, southwest of the Jaffna Peninsula Ilankai, Due to the fact it has been called as **The Golden Temple** of the islands. the former name for V.M.M.V is the government Central college of velanai. **we are proud to say that the college has completed fifty successful years facing many unexpected problems due to the ongoing civil war.**

## *INITIAL STAGE*

During the 1940's father of free educational system, Late Dr. C W. W Kannangara then Minister of Education had been introduced establishment of a Central College for each electorate. According to that scheme Sir Waithilingam Duraiswamy then speaker of parliament had taken action to establish a Central College for Kayts electorate at Velanai. In 1945 initial attempts had been made to start the College within the premises of Saiva Pirahasa Vidyasalai, Velanai. A big Cottage had been constructed there for the purpose. On the request of Sir Waithilingam Duraiswamy the College has been declared opened by the Minister of Education in 1947. It has to say that the College had started to function with five teachers and fifty students alone. The foundation stone for the present beautiful building of the College was laid down by Lord Soulbury, the Governor General of Ceylon (as Ilankai was then known) in 1952 and dedicated to the public by Sir John Kotalawela, the Prime Minister of Ceylon in 1954, Further, many wings of the building had been constructed by time to time. More than these, student hostels for boys and girls also built simultaneously with the main building.

### *PRINCIPALS*

| | |
|---|---|
| Mr. A. K. Kandiah | (1945-1950) |
| Mr. V. Thampoe | (1950-1963) |
| Mr. A. T. Sabaratnam | (1963- 1965) |
| Mr.K. Sivasithamparam | (1965-1967) |
| Mr. J. S. Ariyaratnam | (1967-1971) |
| Mr.V. Ponnuthurai | (71May-Dec) |
| Mr. C. Rasanayakam | (1971-1973) |
| Mr. S. Thiagarajah | (1973-1974) |
| Mr. C. Gunabalasingam | (1974-1982) |
| Mr. K. Rasiah | (1982-1983) |
| Mr. M. Sivarajaratnam | (1983-1987) |
| Mr. S. Shanmuganathan | (1987-1989) |
| Mr. P. Ketharanathan | (1989-1993) |
| Mr.S. Kalatharan | (1993-1996) |
| Mr. K. Ganeshalingam | (1997-present) |

படிப்பகம்

www.padippakam.com

## ACTIVITIES

Mr. A. K.Kandiah had assumed as the first principal of the college in 1945 and served there until 1950. Mr. Kandiah the founder principal whose coinage is the beautiful and lofty 'college Motto' (lead kindly light ). During his career he had introduced future plans for the development of College and these has been fulfiled by mr. V. Thampoe his successor who had the office from 1950 to 1963.He was an excellent administrator and academician. Selection of new site for the college, foundation and opening new buildings, introduction of G.C.E A/L classes, activities in sports and cultural competitions and inviting scholars had been done by him.Mr, V. Thampoe and vice principal Mr. Sivagnanam have visited each and every house in the surrounding areas for the betterment of the College. The College had upgraded during his period.

Informal education on textile. carpentry and agriculture had been introduced. Inter- house sports meet held regularly and inter- college matches between Jaffna based schools had been conducted He was very happy when old students of the college had come there as teachers. The proudest record of this young institution within 10 years of its establishment was the appointment of a Number of its old students who soon after graduation joined the staff and the most outstanding of them were Mr. S. Shanmuganathan, Mr. P. Ketharanathan, Mrs. T. Ketharanathan, Mr. E.K.Nagarajah, Mr. K. Gopalapillai, Mrs,T . Sothivetpillai, Ms. T. Sivanesapillai, and Mrs. M. Shanmuganathan. More came in with the passage of time. He was also very happy when the students entered University from the College during his period and this has been continued. It has to be mentioned here that Prof. S. Balashandiran (Dean, Faculty of Arts, University of Jaffna and Mr. V. Sivanathan (President, VMMVOSA - Canada) were the very first students who entered University directly from the college in 1963 for Arts and Science faculty respectively. Strictly speaking Thampoe's period could be treated as the 'Golden Age' in the history of the College.
Next to him Mr.A. T. Sabaratnam assumed in 1963 and Mr. K. Sivasithamparam assumed in 1965 as principals for two years respectively. Their period also showed a good progress. Form 1967 to 1971, Mr. J. S. Ariyaratnam served as principal. During his days attempts had been made to conduct the 'Silver Jubilee' celebration. Unfortunately it was unsuccessful due to the political problem prevailed at that time. For a few months, a pioneer teacher Mr. V. Ponnuthurai became the principal . After his retirement Mr. C. Rasanayakam was appointed as principal and served from 1971 to 1973. When his term was over Mr. S. Thiyagarajah took the office for a few months. The number of students who entered University had increased from 1963. The public also cooperated well with the College administration.

In 1974, Mr. C. Gunabalasingam was appointed as principal and he had followed the ways of means put forward by the well- known principals of the College to upgrade the academic and administrative standard of the college. A new playground and a new building for the library had been constructed. Unfortunately, the name of the college had been changed as Sir Waithilingam Duraiswamy Madya Maha Vidyalayam, Velanai in memory of former speaker in his period after Mr. Gunabalasingam, Pundit Mr. K. Rasiah took the office as principal from 1982 to 1983 next to him Mr. M. Sivarajaratnam served as principal until 1987. By the end of his period Mr. S. Shanmuganathan was appointed as principal. In the mean time cluster system has been introduced in the educational administrative set up and Mr. Shanmuganathan was appointed as principal. In the mean time cluster system has been introduced in the educational administrative set up and Mr.Shanmuganathan became the cluster principal. Unfortunately, ethnic war took place and due to that the IPKF regime had come in operation.Even though he had managed to run the cluster and college.
Next to Mr Shanmuganathan, Mrs. T. Ketharanathan took the office as principal for a small spell of time and after her Mr. P. Ketharanathan was appointed as principal and cluster principal.

படிப்பகம்

www.padippakam.com

## DISPLACEMENT

In 1990and afterwards the war started again and in 1991 entire students, academic and administrative staff of the College and 99% of the public had displaced to Jaffna Peninsula. Mr. Ketharanathan had managed to run the College at Nawasivayagam Vidyalayam of Koddady, Jaffna and Vaitheeswararan Vidyalayam, Jaffna with a few hundreds of students. Parents, old students Associations, and well Wishers had extended numberless helps to run the College. We have to note here that the plans had initiated from 1991 to celebrate Golden Jubilee, which had to be held in 1995. Mr. S. Kalatharan took the office as principal after Mr. Ketharanathan and during his term, the College found a new site at Kantharmadam Jaffna, where the classes were conducted in temporary cottages. The situation had reminded the scene which was in 1947. He was a young fit man of obvious ability to run the College. If and when the history of this school is written from a displaced student perspective, it would be clearly recorded that Mr. Kalatharan's period was the glorious one for the displaced students of the College. During Oct. 1995, again entire public was displaced to Thenmaradchi and Vanni region. Mr. Kalatharan's and the Golden Jubilee organizing committee had also made arrangements to celebrate the Golden Jubilee, which could not be held in 1995 due to the historical displacement.

## RESTART

In 1996, a certain percentage of the people came to own land and some schools were being started. A few school including Velanai Central College had started to function. At the beginning the school was functioning at Velanai Maha Vidyalayam, under the coordination of Deputy principals Mr. Pon Easan and Mr. V. Sivapalan. In the mean time attempts have been taken by Deputy principals and and senior teacher (Mrs. V. Arasaratnam, Mr. S. Kanaganayagam, and Mr. T Ketheeswaran) to run the College separately. But, due to the permanent building of the College that was under the custody of Sri Lankan security forces, it was decided to run the College at Saraswathy Vidyasalai of Velanai. Mr. K. Ganeshalingam was appointed as principal in 1997. It has to be appreciated here that late Mr. S. Radnarajah (Former Zonal Director of Education) and Mr. S. Ratam (Vice president, VMMVOSA- Velanai and Assistant Govt. Agent of Velanai) have provided valuable effort to restart the College at its permanent place.

## PRESENT STAGE

The College has started to function at its permanent buildings in Aug 1998 with a small number of teachers and one hundred and fifty students, but the security forces are still occupying in the hostels . However, the reopening Ceremony was held on August 28, 1998. The number of students has considerably increased from 150 to 500 during the last three years. G. C. E A/L classes have also been conducted since 1999 with 70 students. Inter house sports meet was held on 21-03-99 after 9 years. Mr. K. Balakrishnan (Vice president, VMMVOSA-Velanai and Assistant Director of planning, Jaffna) was the chief guest. The prize giving ceremony was held on Nov 01, 99 as a preliminary event to celebrate the Golden Jubilee of the college. Prof. S. Balachandiran (Dean, Faculty of Arts, University of Jaffna) honoured the event having been the Chief Guest.

The present principal, Mr. K. Ganeshalingam and his academic and administrative staff are serving the school as best as they could in the face of many odds to bring the College to its former position.Every work undertaken by the school administration is open for every one to see and examine. They are now at a critical juncture with the college activities being badly hampered by the ongoing ethnic conflict. It s their immediate priority to provide intensive course

படிப்பகம்

www.padippakam.com

in English and computer to the Advanced Level students. In this hour of grave need, all of us work towards our common objective of bringing back our "Alma mater" VMMV to its pristine glory.

## ACKNOWLEDGMENTS

I gratefully acknowledge the support and assistance I received from prof. S. Balachandiran (Dean, Faculty of Arts, University of jaffna), Mr. T. N. Punjaksharam (Former Teacher) and Mr. K. Ganeshalingam (Present principal). Particularly, I would like to thank Mrs. T. Ketharanathan (Former Deputy Principal) and Mr. R. Sundaramurthy ((President, VMMVOSA- Colombo Branch and Rtd. Deputy Director of Customs) for their encouragement and assistance to write this brief history.

# Sangamam-2001

It gives me great pleasure to send this message on the occasion of your annual Kalai Vizha, Sangamam-2001, to be held on July 14, 2001.

Velanai Central College is the premier educational institution of the people who are the residents of the Islands. It is a noble gift from our founding fathers who were actuated by the resolve to preserve our education, culture and age old tradition. As inheritors of this great establishment, we should remember the travails they went through to make it a tower of education enriched with stature and reputation. Equally important is our unequivocal commitment to shoulder the multitude responsibilities that have arisen from present calamity in our motherland. VMMV has rendered yeoman service to our community. It is our present duty to preserve it for the sake of our future generation. Our school has produced innumerable distinguished old students eminent in all walks of life and they have proved their matter in various fields worldwide. Even more gratifying is the sense of gratitude and profound affinity to their Alma mater. Their contribution individually and through OSAs all over the world to improve the living conditions back home has been significant. Proudly, Velanai Madya Maha Vidyalaya old students' Association-UK is one of the pioneering benefactors overseas. It would be very desirable for all the OSAs to work together, to co- ordinate our activities and prevent duplication.

I wish the Velanai Madya Maha Vidyalayam OSA- UK under the talented leadership of MR. R. Sivathas together with active committee members all success in its endeavours.

,,Education is an ornament in prosperity and a refuge adversity,.
-Aristotle.

***S. Elancheliyan, B.Sc., B. Eng., CCNA,***
*Old student of VMMV (1975-1982)*
*Former President, VMMVOSA-Canada(1997-1999)*



படிப்பகம்

www.padippakam.com

# துன்பத்தில் இன்பம்

துன்பங்கள் துயரங்கள் பல சமூக மாற்றங்களுக்கு ஏதுவாக அமைகின்றன. அவற்றின் மத்தியில் கிடைக்கும் இன்பமும் அலாதியானது. சென்ற நூற்றாண்டின் நாற்பதுகளின் இறுதியில் உதயமாகிய எம் வேலணை மத்தியில் அன்னையும் அவளின் பிள்ளைகளும் பெரும் அனர்த்தங்களுக்கு உட்பட்டபோது ஏற்பட்ட மறைமுக நன்மைகளின் ஒன்று அன்னையின் நாமம் சாற்றும் பழைய மாணவர் சங்கத்தின் தோற்றம் எனலாம்.

எம் அன்னையின் சமகாலக் கல்வி நிறுவனங்களின் பழைய மாணவர்கள் தமக்கெனச் சங்கங்கள் அமைத்து தம் அன்னையை போஷித்து வந்த வேளை நாம் எம் கல்லூரி அன்னையைப் பற்றி மிகப் பாராமுகமாகவே இருந்து வந்தோம். எம்மிடம் பழைய மாணவர் சங்கம் அமைக்கும் முயற்சி பல தடவைகள் தலைதூக்கியபோதும் எண்பதுகளின் இறுதிவரை அது உருப்படியாக வெற்றி பெறாதமை வெட்கப்படக் கூடிய ஒன்று. அனர்த்தங்கள் எம்மை நெருங்கத் தொடங்கிய போது விழித்துக் கொண்டோம்.

எம் விழித்துணர்ச்சி முதற் கட்டமாகக் கல்லூரி அதிபரைத் தலைவராகக் கொண்டு சிறப்புற இயங்கும் தாய்ச் சங்கத்தை வேலணையிலும், பின்னர் பக்கபலமுள்ளதோடு கிளைச்சங்கத்தை கொழும்பிலும் உருவாக்கியது. அடுத்தகட்டமாம் உலகளாவிய ரீதியில் கல்லூரியின் பழைய மாணவர்கள் செறிந்து வாழும் நாடுகளில் அன்னையைப் போற்றவும், போஷிக்கவும் பழைய மாணவர் சங்கக்கிளைகள் நிறுவப்படலாயின. அனர்த்தங்களால் புண்பட்டுப் புலம் பெயர்ந்த மாணவர்கள் பிற மண்ணில் ஒன்று சேரும்போது இயல்பாக ஏற்படும் ஒற்றுமை உணர்வே எம் பிற நாட்டுக் கிளைகளின் உந்துசக்தியாயின.

பல இழப்புகள் சோகங்கள் மத்தியில் கல்லூரி அன்னை பெயரால் ஏற்படக்கூடிய பாசத்தொடர்பு புரிந்துணர்வு விலைகொடுத்து பெறமுடியா ஒருவகை இன்பமாகும். ஆங்கிலக் கல்வியைப் பரவலாக்கும் அன்றைய மத்திய கல்லூரிக் கோட்பாட்டிற்கு இன்று புத்துயிர் அளிக்க முயற்படுகிறார்கள். அன்னைக்கு அடுத்த பொற்காலம் வரலாம். சூரிய அஸ்தமனத்தை அன்றைய சாம்ராச்சியத்தின் தலைநகர் இலண்டனில் இயங்கக் கூடிய பழைய மாணவர் சங்கம் கல்லூரியின் ஏனைய பிற நாட்டுக்கிளைகளுக்கெல்லாம் ஒரு முன்மாதிரியாக இயங்கி அன்னைக்குப் பெருமை சேர்க்க முடியும். சங்க ஒன்று கூடல் பழைய மாணவர்களிடையே ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் மேலும் உயர்த்தும். அவ்வுணர்ச்சி கல்லூரி அன்னையின் உணர்ச்சியாகப் பிரமிப்பதாகும்!

செ. அம்பலவாணர்
கல்லூரியின் அன்றைய பின்வரிசை மாணவன்

www.padippakam.com

With the

Best Compliments

from



T. Pirabakaran
(Old Student Of VMMV)

18 Ash Grove
Southall
Middlesex
**020 8575 0909**

படிப்பகம்

www.padippakam.com

# அன்பு வழி வெற்றிகண்ட அதிபர் குணபாலசிங்கம்



ஒரு பாடசாலையின் கற்றல், கற்பித்தல் மற்றும் பண்பாடு அனைத்தும் நல்ல முறையில் அமையப் பெற வேண்டுமாயின் ஆசிரியர் குலாம் வந்து வாய்க்கப் பெற்றால் மட்டும் போதாது அதிபர் ஆற்றல் மற்றும் ஆளுமை பண்புகள் வாய்ந்த தன்னலம் கருதாத ஒருவராக வந்து அமையப் பெற வேண்டும். அங்ஙனம் வந்து அமைந்தவரே அதிபர் குணபாலசிங்கம் அவர்கள்.

இவர் எழுபதுகளிலிருந்து எண்பதுகள வரை ஒன்பது ஆண்டுகள் வேலணை மத்திய மகா வித்தியாலயத்தில் கால் பதித்தமை எமது பாடசாலை பெற்ற பேறுகளில் ஒன்று என்றால் மிகையாகாது. இக்காலப் பகுதியில் இவர் ஆற்றிய பணி மறக்க முடியாததும் போற்றுதற்குரியதும் ஆகும். இவர் காலப் பகுதியில் கல்வி கற்ற மாணவர்கள் இன்றும் அவரை நினைந்து பெருமை கொள்வதை காண முடிகிறது.

வெள்ளை வெளேரென்ற உடை அவரின் உள்ளத்தூய்மையை எடுத்துக் காட்டுவது போல் அமைய நிமிர்ந்து நன்நடை, நேர்கொண்ட பார்வை அனைத்தும் அவரது ஆளுமையின் வெளிப்பாடுகளாக திகழ பாடசாலைக்கு வரும் அவரது தோற்றம் அலாதியானது.

அன்பாக பேசும் சுபாவத்திற்கு ஏற்ப கண்டிப்பும் உடையவர். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மூன்றையும் தனக்கே உரிமையாக்கி மகிழ்ந்தார். பாடசாலை ஆரம்பிக்கும் நேரத்திற்கு முன்னதாகவே வரும் அவர் பாடசாலை முடிந்த பின்னர் மாணவரை வழியனுப்பி செல்வதைப் போல் காலம் தாமதித்தே வீடு செல்வார்.

பாடசாலையில் பயிலும் மாணவர்கள் அனைவரையும் உன்னிப்பாக கவனிப்பார். அதிபர் தன்னைக் கவனிக்கிறார் என்று அறியாது தவறு செய்து தண்டனை பெறும் மாணவர்களும் உண்டு. ஆசிரியர் வகுப்பறையில் படித்துக் கொண்டிருக்கும் போது கூட தன் பார்வையை செலுத்த தவறுவதில்லை. வகுப்பறையில் ஆசிரியர் இல்லையாயின் என்ன பாடம் உங்களுக்கு என்று கேட்பார். ஆசிரியர் வந்திருந்தால் உடனே சென்று கூட்டி வரும்படி பணிவார்.

கடமையை சரிவரச் செய்யாத ஆசிரியர்களோடு தர்க்கத்திலும் இறங்கி விடுவார். இதனால் பல ஆசிரியர்கள் இவர் மீது வெறுப்பும், ஆத்திரமும் அடைந்ததுண்டு. இவரை தங்கள் மாய வலைக்குள் போட முடியாமல் விழித்தவர்கள் உண்டு. இவரை எப்படியும் இப்பாடசாலையை விட்டு அனுப்ப வேண்டும் என்று நினைத்து மாணவரைத் தூண்டி விட்டவர்கள் உண்டு. அப்போது கூட எய்தவர் இருக்க அம்மை நோவானேன் என்று மாணவரை மன்னித்தமை அவரின் பெரு உள்ளத்தைக் காட்டுகிறது. தம் பிழை உணர்ந்த மாணவர்கள் மன்னிப்பு கேட்பதற்காக அவர் இல்லம் வரை நாடிச் சென்றனர். இவையெல்லாம் கடமையைச் செய் பலனை எதிர்பாராதே என வாழ்ந்த அந்த உள்ளத்திற்கு தாக்கம் இல்லை எனினும் மாணவர் உள்ளம் இன்றும் அதை நினைத்து கவலை கொள்வதில் அர்த்தம் இருக்கத் தான் செய்கிறது.

மாணவர்களுக்கு விளையாட்டுக் கல்வியோடு ஆன்மீகக் கல்வியும் தகுந்த முறையில் போதிக்கப்பட வேண்டும். அந்நெறி மூலம் எதிர்காலத்தில் அவர்கள் பண்பட்ட வாழ்க்கை வாழ முடியும் என்பதில் நம்பிக்கை கொண்டவர். பாடசாலை ஆலயத்தில் நடைபெறும் பூஜை முதல் திருக்கேதீஸ்வரத்திலும் எமது பாடசாலையின் பெயரில் பூஜை ஒன்று மேற்கொள்ள வேண்டும் என்று விரும்பியதோடு அதில் மாணவர்களை பங்கேற்க வைத்த பெருமையும் அவரையே சாரும். அந்த பூஜை நாட்களில் மாணவரோடு மாணவராக ஆகிவிடுவதும் இன்றும் மனக்கண் முன் வந்து நிழலாடுகிறது.

“சங்கமம்” 2001 ஆண்டு மலரில் நான் படித்த காலப் பகுதியில் என் உள்ளத்தைக் கவர்ந்த அந்த அன்பு உள்ளம் கொண்ட அதிபர் குணபாலசிங்கம் அவர்களை என் கண்ணுக்கெட்டிய பார்வையில், நான் அறிந்தவகையில் இந்த மலரில் நினைப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு பெருமகிழ்வடைகிறேன்.

**செ. தேவன்**
**சரவணை**

படிப்பகம்

www.padippakam.com

*With the*

*Best Compliments*

*from*



*T.Jeyakumaran*

*(Old student of VMMV)*

# Home Needs Super Store(Londis)

1086 Uxbridge Road
Hays
Middx
UB4 0RJ
Tel: 020 8573 0645

படிப்பகம்

www.padippakam.com

# அம்மா நீ வேலணையில் அழியாமல் வாழவேண்டும்

வான் உயர்ந்த பனைமரங்கள் வழிகாட்டும் நடைபாதை
நான் பார்த்த வயல் வெளியில் நட்டார்கள் அத்திவாரம்
தென்னோலைக் கட்டிடத்தில் மண் மேட்டில் இருந்த உன்னை
என்போன்றோர் எழுச்சிபெற எழுப்பினார் இருமாடிக் கட்டிடமாய்

அதிகாலை எழுந்திடுவோம் அப்பாவுக்கு உதவிடுவோம்
அசைந்தாடும் புகையிலைத் தோட்டம் அதன் அருகே - உன்வேலி
மதிய இடைவேளையிலும் கன்றுக்குத் தண்ணீர் விட்டோம்.
அதுவளரும் அழகைப் போல நம் அறிவும் வளர்த்து விட்டாய்

எனது கதை இது என்போன்றோர் ஏராளம்
உனது தயவால் உலகெல்லாம் வலம் வாறோம்
எங்கு நாம் சென்றாலும் எத்துறையில் நுழைந்தாலும்
அங்கெல்லாம் உன் மக்கள் அரவணைப்பு தருகின்றனர்

தீவான் என்று சிரித்திடுவார் ஒருகாலம் - அவன்
தீரன், சிறந்த ஒரு அறிவாளி
வீரன் விபரம் பல தெரிந்தோன்
ஞாலம் முழுதும் நடமாடும் நாயகராய் ஆக்கிவிட்டாய்

உன்னால் உயர்ந்தோர் உலவாத நாடில்லை
எண்ணிடும் போது இறுமாப்புக் கொள்கின்றோம்.
கல்லாலும் மண்ணாலும் கட்டிடப் பொருளாலும்
உண்டான போதும் உண்மையிலே நீ நம் அன்னை.

உன்னோடு இருந்த நாட்கள் உள்ளத்தில் வந்துவிட்டால்
கண்ணோரம் நீர்கசியும் கதைகள் பல மனதில் வரும்
பொன் இருந்தும் பொருள் இருந்தும்
-பொய் வாழ்வு வாழ்கின்றோம்.
அம்மா நீ வேலணையில் அழியாமல் வாழவேண்டும்.

**முருகேசு இரத்தினவேல்**
நில அளவையாளர்
வான் படப்பிடிப்பாளர்.



www.padippakam.com


With the
Best Compliments

From

G. Jeyakumar
(Old Student of VMMV)

Clipstone Service Station (BP)
30 Clipstone Street
London
W1P 7DL
Tel: 020 7323 4866


படிப்பகம்

www.padippakam.com

# வேலணை மத்திய மகா வித்தியாலயம்

நாம் புலம் பெயர்ந்து, எங்கு வாழ்ந்தாலும், நாம் பிறந்து வளர்ந்த மண்ணும், கல்வி பயின்ற பாடசாலைகளும், பழகிய நண்பர்களும், உறவினர்களும் உலவிய இடங்களும், நம் மண்ணைத் தாலாட்டும்கடல் அலைகள் போல், எம் எண்ணக் கடலில், நினைவலையாய் எழுந்த வண்ணமே இருக்கும். என் மனதில் நினைவுவலைகளில் ஒன்றாய் வேலணை மத்திய மகாவித்தியாலயம் விரிகிறது.

இரு மாடிக் கட்டடம், அதன் முன்பாக நெடிது வளர்ந்த மலை வேம்பு, விளையாட்டு மைதானம், சிவகாமி சமேத நடராசப் பெருமான் ஆலயம், வகுப்பறைகளைக் கொண்ட பல சிறிய கட்டடங்கள் சீமேந்தால் மூடப்பட்ட கிணறு, ஆண், பெண் மாணவர்கள் விடுதிகள் போன்ற பலவற்றைக் கொண்ட மத்திய மகா வித்தியாலயம், விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள்,பொறியியலாளர்கள், மருத்துவர்கள்,கணக்காளர்கள், எழுதுவினைஞர்கள் உருவாக் களம் அமைத்து நிமிர்ந்து நிறுகின்றது.

இலங்கைத் தீவின் வடபால் அமைந்துள்ள சப்த தீவுகளின் ஒன்றான வேலணைத்தீவின் (லைடன் தீவு) 1945ம் ஆண்டு கார்த்திகை மாதம் 01ம் திகதி, வேலணை மேற்கில் திரு கந்தப்பர் அவர்களால் நடாத்தப்பட்ட சைவப் பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கையின் இலவசக் கல்வியின் தந்தையென வர்ணிக்கப்படும் கல்வி மந்திரி சேர் W.W கன்னங்கரா அவர்களின் விதந்துரையின் பேரில் சட்டசபைச் சபாநாயகர் சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி அவர்களின் வழிகாட்டலில் வேலணை மக்களின் உதவியுடன் வேலணை கிராமசபைத்தலைவர் திரு. இ. மருதையினார் அவர்களின் அனுசரணையுடன் செயல்படத் தொடங்கியது.

நாம் இன்று காணும் இரு மாடிக் கட்டிடத்திற்கு ஆளுநர் சோல்பரிப் பிரபு அவர்கள் அடிக்கல் நாட்டினார். அன்றைய பாராளுமன்ற உறுப்பினர் அல்பிரட் தம்பியையா அவர்களின் பெரு முயற்சியால் கட்டப்பட்டு, அப்போதைய பிரதமராக இருந்த சேர் ஜோன் கொத்தலாவல அவர்களால் 1954ம் ஆண்டு திறந்துவைக்கப்பட்டது. அவரை வங்களாவடிச் சந்தியிலிருந்து குதிரை வண்டியில் பாடசாலைவரை அழைத்துச் சென்றதும் இன்றும் பசுமை நினைவாக உள்ளது. பாடசாலைக்கு முன்பாக உள்ள மலை வேம்பு, அவர் நாட்டிச் சென்றதே.

இவ்வித்தியாலயத்தின் முதல் அதிபராகத் திரு. A. கந்தையா அவர்களும், முதல் உதவி அதிபராகச் செல்வி L.P முருகேசு அவர்களும், முதல் விடுதிமேற்பார்வையாளராக திருமதி. சபாரெத்தினம் அவர்களும் இணைந்து கொள்ள, முதல் மாணவனாக திரு. M. லிங்கப்பிள்ளை அவர்கள் சேர்ந்து கொண்டார். இவ் வித்தியாலயத்தின் நீண்ட கால அதிபராகக் பணியாற்றியபெருமை திரு.வி. தம்பு அவர்களையே சாரும். இவர் காலத்தில் (1951 - 1962) வித்தியாலயம் பல வழிகளில் முன்னேற்றமடைந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. இக் காலத்தில் தீவுப் பகுதியின் பல பாகங்களில் இருந்தும் மாணவர்கள் இக் கல்லூரியில் கல்வி பயின்றார்கள். ஆறாம் வகுப்பு தொடக்கம், கல்விப் பொதுதராதரம் (உயர்தரம்) வரை கலை, விஞ்ஞானம், வர்த்தகம், ஆகிய துறைகளில் கல்வி போதிக்கப் படுகின்றது.

ஆரம்ப காலத்தில் இருந்து 1997ம் ஆண்டு வரை பாடசாலையில் பணியாற்றிய அதிபர்களை நோக்கும் போது,

1. திரு. A. K. கந்தையா அவர்கள், ஆரம்பம்
2. திரு.V.தம்பு அவர்கள் 1951 - 1962
3. திரு.A. T சபாரத்தினம் 1962 - 1966
4. திரு. J.S .அரியரெத்தினம் 1967 - 1971

இக் காலத்தின் பின் திரு. V. பொன்னுத்துரை, திரு.இராசநாயகம், திரு. தியாகராசா, திரு. C. குணபாலசிங்கம், திரு. க. இராசையா, திரு. சிவராஜரட்ணம், திரு.சண்முகநாதன், திரு. பொ. கேதாரநாதன், திரு. அ. கமலாதரன், திரு.K. கணேசலிங்கம் (1997) ஆகியோர் அதிபராகப் பணியாற்றி, அதன் வளர்ச்சிக்கு பாடுபட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில், பல அவல நிலைகளுக்கு மத்தியில் இவ் வித்தியாலயக் கட்டிடம் மட்டும் உரிய இடத்தில் இருக்கஅதன் செயற்பாடுகள் எம் மக்கள் இடம்மாறுவதுபோல் மாறிக் கொண்டிருப்பதை அறிய முடிகிறது. பல இன்னல்களுக்கு மத்தியிலும் பாடசாலைப்பணியைத் தொடர்ந்து அன்னிய தேசத்தில் வாழும் நாம் பாராட்டியே ஆக வேண்டும். அவர் பணிக்கு உதவ வேண்டும். வேலணை மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர்கள் அதன் பணிக்கு உதவுவது கடமையாகும்..

வாழ்க தமிழ் வளர்க எம் பணி.

பழைய மாணவனும் வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் கணக்காளர்

**க. சுப்பிரமணியம் – ஜேர்மனி**

(நன்றி பிரான்ஸ் பழைய மாணவர் சங்கம்.)

www.padippakam.com


*With the*
*Best Compliments*

*from*



*V. Selvanathan*
(Old Student of VMMV)

# MOHAMMED SUPER STORE

229B St Alban's Road
Watford
Herts
Tel: 01923 255709
Fax: 01923 255710


படிப்பகம்

www.padippakam.com

# மாணவப் பருவம்

பள்ளியில் படித்த காலம்
பசுமையாய் நினைவில் தோன்ற
உள்ளத்தில் உதித்த கானம் - அந்த
உவகையில் பிறந்த கானம்

மல்லிகை நிறத்தை ஒத்த
மனத்தினை உடைய அந்த
மாணவப் பருவம் தானே
மகிழ்வது கனிந்த பருவம்

இல்லத்தில் ஏழ்மை மிகும்
இருந்தாலும் அது தெரியா
உள்ளத்தில் துன்பமில்லை
இன்பவெள்ளத்திலது மிதக்கும்

சிந்தையில் பல நினைவு தோன்றி
சிறகடித்து பறக்குமங்கே
வானவில் யாலம் தோன்றும்
வானத்திலும் ஏறத் தோன்றும்

துன்பமது அறியா வண்ணம்
இன்பமது சூழ்ந்த பருவம்
துள்ளிவரும் உணர்வுகளால்
துடியாட்டம் மிகுந்த பருவம்

திக்குகள் பல விருந்து வந்திடினும்
ஒன்றாகத் தான் இணைந்து
ஓர் குடிலில் ஒற்றுமையாய்
ஓர் குலமாய் வாழுகின்ற பருவமது

குறும்புகள் பல நிறைந்த
பருவமாய் இருந்தாலும்
குற்றங்கள் இழைப்பதற்கு
அஞ்சுகின்ற பருவமது

மாணவப் பருவம் தன்னில்
மான்புறப் பெற்ற கல்வி
மானிடம் சிறந்து வாழ
மகத்தான வழியைக் காட்டும்

வாழ்க்கையில் பல பருவம்
வந்தடுத்த போதினிலும்
மாணவப் பருவம் போல்
மகிழ்ச்சி தருவது எப்பருவம்?

நன்றி

**செல்லையா -தேவன்**
பழைய மாணவன்
(சரவணை கிழக்கு வேலணை)

படிப்பகம்

www.padippakam.com

*With the*

*Best Compliments*

*from*



V. Yoganathan

(Old Student of VMMV)

**SCRUBS LANE SERVICE STATION (TEXACO)**

235 Scrubs Lane

London

Tel: 020 8749 4280

Fax: 020 8742 9758

படிப்பகம்

www.padippakam.com

S.பாலச்சந்திரன்
பேராசிரியர் (புவியியல் கல்வி)
கலைப்பீடம்

# யாழ்ப்பாணக் குடாநாட்டின் நன்னீர் வளம்: ஒரு நோக்கு

- செ. பாலச்சந்திரன் -

நாம் வாழுகின்ற நிலத்தில் காணப்படும் நீர் பேணப்படும் போதுதான் அது நமக்குச் சொந்தமாக இருக்கும். இலங்கையின் வரண்ட வலயத்தில் பலநதிகள் இருக்கின்றன. அந்த நதிகளில் காணப்படும் நீரைப் பேண அக்கால மன்னர்கள் நதிகளுக்குக் குறுக்காக அணைகளைக் கட்டிக் குளங்களை உருவாக்கினார்கள். நீர் பேணப்பட்டது. நிலம் சொந்தமாகியது. பின்பு நாடு சுதந்திரம் பெற்றபின் படிப்படியாக நீரின் முக்கியத்துவத்தை உணர்ந்த ஆட்சியாளர் பல அணைகளைப் புதுப்பித்ததும், புதியவற்றைக் கட்டியும், ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்தித்திட்டங்களை உருவாக்கியும் பேணிப் பாவிக்க ஆரம்பித்தனர். ஆனால் யாழ்ப்பாண குடாநாடு மேற்கூறப்பட்டது போன்று நீர்த் தேக்கங்களைக் கொண்டிருக்கவும் இல்லை. பின்பு அப்படியான நீர்த் தேக்கங்கள் உருவாக்கப்படவும் இல்லை. ஆயினும் 7 லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் இங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். கிறிஸ்துக்கு முற்பட்ட சில நூற்றாண்டுகளில் இருந்து இங்கு மக்கள் வாழத் தொடங்கியிருக்கிறார்கள். இதற்கு அடிப்படையாக இருந்தது நதியோ,குளமோ அல்ல: தரைக்கீழ் நீர்தான், வடக்குகிழக்குப் பிரதேசங்களின் பாரிய பரப்பு இருந்தும் குடாநாட்டில் மக்கள் அதிகமாகவும், செறிவாகவும் வாழக் காரணம் இந்த நீர் தான். இந்த நீர் சில இடங்களில் உப்புத் தன்மையைக் கொண்டிருக்கிறது. இந்த நிலமை ஊடுபுகவிடும் இயல்பினாலும், இடத்துக்குரிய தன்மையினாலும், இங்குள்ள கூடிய நீர்ப் பாவனையாலும் தோன்றுகின்றது. மக்களின் தொடர்ச்சியான நீர்ப் பாவனையால் நன்னீர் மட்டம் குறைய உப்புநீர் அங்கு உட்செல்லுகின்றது. சில இடங்களில் எதுவித நோக்கம் இல்லாமல் நீர் கடலை அடைகின்றது. இன்னும் சில இடங்களில் உப்புநீர் நன்னீருடன் கலந்து விடுகின்றது. பரவலாக நன்னீர், தேவைக்கு மேலதிகமாகப் பாவனையாகின்றது. இவை போன்ற செயல்களினால் எமது தரைக்கீழ் நீர் வளம் தொடர்ந்தும் எமது பரம்பரையினருக்கு ஈடுகொடுக்குமா? என்பது இப்போது பரவலாக எழுதப்படும் கேள்வி, இதற்கு நாம் இந்த வளத்தைப் பேணிப் பாவித்தால் ஈடுகொடுக்கலாம் என விடையளிக்கலாம்.

## யாழ்ப்பாணக் குடாநாட்டின் தோற்றம்

இன்றைய இலங்கையின் முழு பரப்பும் ஒரேயடியாகத் தோற்றம் பெறவில்லை. ஒரு காலத்தில் இலங்கை என்ற தனிப்பரப்பு இருக்கவில்லை. இந்தியக் குடாநாட்டுடன் சேர்ந்தே காணப்பட்டது. புவிச்சரித வரலாற்றில் புவியின் மேற்பரப்பு பங்சியா (Pangaea) என்ற கண்டத்தைக் கொண்டிருந்தது. பின்பு இது பிளவுபட்டு கோண்ட்வானாக் கண்டமும், லோரேசியாக் கண்டமும், ரெதீஸ் கடல் பரப்பும், தோற்றம் பெற்றன. இந்தியக் குடநாடு, ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா, அன்ராட்டிக்கா, லத்தீன், அமெரிக்கா, (தென்அமெரிக்கா) ஆகியன ஒன்று சேர்ந்து ஒன்று சேர்ந்து கோண்ட்வானாக் கண்டமாக இருந்தது. இன்றைய தென் ஆபிரிக்காவுக்குச் சற்று தெற்கில் இதன் தென் எல்லை அமைந்திருந்தது. இக் கண்டத்துக்கு வடக்கில் லோரேசியாக் கண்டம் அமைந்திருந்தது. இன்றைய ஆசியா, ஐரோப்பா, வடஅமெரிக்கா ஆகியன அதனுள் அமைந்திருந்தன. பின்பு இக் கண்டங்கள் படிப்படியாகப் பெயர்ச்சிக்குப் உட்பட்டன. இதனால் இன்றைய கண்டங்களும், கடல்களும் உருவாகின. கோண்ட் வானாக்கண்டத்தில் இருந்து இன்றைய தென் கண்டங்கள் பெயர்ந்த போது இந்தியக் குடாநாடு வடக்கு, வடகிழக்கு நோக்கிப் பெயர்ந்து இன்றைய அமைப்பைப் பெற்றது. இன்றிலிருந்து 165 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் நிலவிய ரேயஷிக் (Triassic) காலத்தில் இப்பெயர்வு படிப்படையாக நிகழ்ந்தது. பின்பு வடமேற்கு இலங்கை தவிர்ந்த இலங்கையின் நிலம் 135 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் நிலவிய யூரசிக் (Jurassic) காலத்திலும், 75மில்லியன் ஆண்டுகளுக்கு முன் நிலவிய கிறிற்றேசியஸ் (Cretaceaus) காலத்திலும் படிப்படியாக, இந்தியக் குடாநாட்டின் தென்கிழக்குப் பகுதியில் இருந்து பெயர்ந்தது. பின்பு இந்தப் பெயர்ச்சிக்குட்பட்ட பாகத்துக்கும், இந்தியக் குடாநாட்டுக்கும் இடையில் காணப்பட்ட பகுதியில் அடையல்கள் படிவு செய்யப்பட்டன. கடலுக்குரிய படிவுகளும் படிவு செய்யப்பட்டன. ஏறக் குறைய 50 மில்லியன் வருடங்களாக இத்தகைய படிவு

இன்றிலிருந்து 12 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் நிலவிய மயோசீன் (Miocene) காலத்தின் பிற்பகுதியில் இலங்கையின் வடமேற்குப் பகுதி கடல் நிலப்பரப்பில் இருந்து படிப்படியாக மேலுயர்த்தப்பட்டது. இந்த வட மேற்குப் பகுதியைப் புத்தளத்தில் இருந்து கிளிநொச்சியூடாக முல்லைத்தீவு வரை ஒரு வளைகோடு இட்டால் அதற்கு வடக்காக உள்ள பிரதேசம் எனக் கொள்ளலாம். கடலில் படிவு செய்யப்பட்டு உருமாற்றம் பெற்ற பின் உயர்த்தலின் போது முறிவுக்கு உட்பட்ட பாறையாகச் சுண்ணம்புக் கற்பாறை அமைந்தது. இப்பாறையமைப்பு உடைவுகளையும், முறிவுகளையும் கொண்டதாகும் படிப்படியாக இவற்றினூடாக மழைநீர் உட்சென்று இவற்றை நிரப்பின. நன்னீர் கூடக்கொண்ட பகுதிகள் நன்னீர்த்தாழிகளாக அமைந்தன.
ஏனையவை உப்புத் தன்மைச் செறிவின் வெவ்வேறு அளவினைக் கொண்ட தாழிகளாக அமைந்தன.

## தரைக்கீழ் நீர் வளம்

இத்தகைய தாழிகளைப் பின்வருமாறு கூறலாம்.

1. யாழ்ப்பாணக் குடாநாட்டுத் தரைக்கீழ் நீர்ப் பகுதி
2. பரந்தன் - முல்லைத்தீவு ,,
3. முழங்காவில் ,,
4. மன்னார் - முருங்கன் ,,
5. கொண்டச்சி ,,
6. வனைத்தைவில்லு ,,
7. மதுரங்குளி ,,

இப் பகுதிகள் செறிவான நன்னீர்ப் பகுதிகளாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டை எடுத்துக் கொண்டால் வலிகாமம், தென்மாராட்சி பகுதிகள் செறிவான நீர்ப்பகுதிகளாகும். இவை பரந்த சிறப்பான ஊடுபுகும் இயல்புடைய பகுதிகளாகும். வடமராட்சி ஊடறுக்கப்பட்ட, இடைக்கிடை உப்புநீர்கொண்ட தொடர்ச்சியற்ற ஊடுபுகவிடும் பகுதிகளைக் கொண்டது. தொண்டமானாற்றில் இருந்து சுண்டிக்குளம்வரை இத்தகைய நிலை உண்டு. இவை இடைமாறி உருவான பாறை ( Intergranular rock) யமைப்பைக் கொண்டவை. யாழ்ப்பாணக் கடனீரேரிக்கரையோரங்கள், தென்மராச்சியின் கிழக்குக்கரையோரம், அதன் வடக்கு, மேற்கு கரையோரங்கள் வலிகாமத்தைச் சுற்றியுள்ள கரையோரங்கள், யாழ்ப்பாண நகரை உள்ளிட்ட கரையோரம், தீவுகள் அனைத்தும் இடைக்கிடை உப்புநீர்கொண்ட, தொடர்ச்சியற்ற ஊடுபுகவிடும் இயல்புகொண்ட வலயங்கள் ஆகும். இவை பிளவு அல்லது உடைவுப் பாறையமைப்பைக் (Fissured rock) கொண்டவை ஆகும்.

தரைகீழ் நீர் உருவாக்கத்தை பின்வரும் சமன்பாட்டால் விளக்கலாம்.

UW = R- E- ET- SS-SF-HU
UW - தரைக்கீழ் நீர்
R - மழைவீழ்ச்சி
E - ஆவியாதல்
ET - ஆவியுயிர்ப்பு
SS - மேற்பரப்பு நீர் நிலைகளின் சேமிப்பு
SF - மேற்பரப்பு நீர் வெளியேற்றம்
HU - மக்கட் பாவனை

## தரைக்கீழ் நீர் அமைப்பு

யாழ்ப்பாணக் குடாநாட்டின் தரைக்கீழ்நீர் அமைப்பினை ஒரு பக்கம் பார்வைப் படமாகப் பார்த்தால் பின்வரும் நிலைதென்படும். (விளக்கப்படம் 01)

a - சிவப்பு மண்
b - சுண்ணாம்புப் பாறை
e - அடிமட்டப்பாறை
MSL - கடல் மட்டம்
GWL - தரைகீழ்நீர் மட்டம்
FWZ - நன்னீர் வலயம்
BWZ - சர்வநீர் வலயம்

1. வற்றும் கிணறு
2. புத்தூர்க் கிணறு
3. சாதாரண கிணறு
4. கீரிமலை ஊற்று
5. கரைச்சல் பள்ளம்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் காணப்படும் சுண்ணாம்புக் கல்லும், மணலும், நீர் உட்புகுந்து தங்கியிருக்கக் காரணமாகிறது. இன்றுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி இந்தச் சுண்ணக்கல் தடிப்பு 270 அடியாக இருக்கிறது. சுண்ணாம்புக்கல் மேலுயர்த்துகையின்போது படி மூட்டுக்களைக் கொண்டிருந்தது. இவற்றினூடாகப் பின்பு $CO_2$ கரைசலினால் பல உடைவுகளையும், குகைகளையும், நீர் கொள்ளும் படுக்கைகளையும் கொண்டுள்ளதாக மாறியது. பாறை, மணல் ஆகியவற்றின் இடையில் நீரின் ஊடுவடியும் அளவு வேறுபடும். இதனை அட்டவணை 1 எடுத்துக் காட்டுகிறது.

நீரின் ஊடுவடிதல் (நுண்டுளைமை)

| | | | |
|---|---|---|---|
| மணல் | 50 - 60% | பரல் | 30 - 40 % |
| களிமண் | 45 - 55 % | பரலும் மணலும் | 20 - 35 % |
| வண்டல் மண் | 40 - 50 % | மணற்கல் | 10 - 20 % |
| சீராள மணல் | 30 - 40 % | சுண்ணாம்புப் பாறை | 1 - 10 % |

சுண்ணாம்புப் பாறை நீரினை உட்புக விடுதலை மிகக் குறைவாகக் கொண்டுள்ள போதும் அது கொண்டுள்ள கரைசற் தன்மையின் காரணமாக அதிக நீரை உள்விடுகின்றது. தொடர்ச்சியான கரைசல் காரணமாகப் பலவகையான நிலவுருவங்கள் இப் பாறையின் உட்பகுதிகளின் காணப்படுகின்றன.மேலும் தொடர்ச்சியான கரைசல் பாறையினை உடைத்து குளங்களை உருவாக்கின எனப் பேராசிரியர் குலரத்தினம் கூறியுள்ளார். அவருடைய கருத்துப்படி இக் குளங்கள் மேலதிக மழைநீரைத் தரையின் கீழ் கொண்டுசெல்லும் துவாரங்கள் ஆகும். மாரிகாலத்தில் நிரம்பி, கோடைகாலத்தில் வற்றுவது இவற்றின் இயல்பு . இதேபோல் மணல் மிக வேகமாக நீரை உட்புகவிடும் இயல்பினது. இதனால் குடாநாட்டு மணல் பிரதேசங்கள் சிறந்த தரைகீழ் நீர்வளப் பகுதிகளாக இருப்பது குறிப்பிடத்தக்கது. செம்மண்கொண்ட வலிகாமம் பகுதியும் நீரை உட்புகவிடும் இயல்பை சிறப்பாக உடையது. இப்பகுதி செழிப்பான உட்புகவிடும் இயல்புடைய நன்னீர்வளம் கொண்ட பகுதியாகும்.

சுண்ணாம்புக்கல் அமைப்பினை நோக்கும் போது யாழ்ப்பாணக் குடா நாட்டில் தரைக்கீழ் நீர் வில்லை அதன் கீழ் உப்பு நீரைக் கொண்டுள்ளது. அது நிலைமாறும் வலயமாக இருக்கின்றது. (விளக்கப் படம்01). யாழ்ப்பாணக் குடாநாட்டில் இந்தவில்லை பெரிதாகவும், ஏனைய தீவுகளில் சிறியதாகவும் இருக்கின்றது. இட உயரத்துக்கு ஏற்ப தரைக்கீழ் நீர்மட்டம் வேறுபடும். இதனால் சில கிணறுகள் ஆழமாகவும், சில கிணறுகள் கோடையில் நீர் வற்றியும் இருக்கும். நன்றாகச் சுண்ணாம்புக் கல் கரைந்த இடங்கள் நிரந்தர நீர் கொண்டதாக இருக்கும். அவற்றுட் சிலவற்றை அட்டவணை 02 காட்டுகிறது.

அட்டவணை 2

### நிரந்தர நீர் கொண்ட குளங்கள்

1. நிலாவரையில் உள்ள புத்தூர்க்கிணறு
2. குரும்பசிட்டியில் உள்ள வற்றாக்கிணறு
3. பொக்கணை (ஊரெழு) வற்றாக்கிணறு
4. மானிப்பாய் இடிகுண்டுக் கிணறு
5. நல்லூரில் உள்ள ஜமுனாரி
6. பொந்துக் கிணறு - தொண்டமானாறு
7. வியாவக்குளம் புன்னாலைக் கட்டுவன்
8. கீவன்காமம் - சங்குவேலி
9. பொக்கனை ஏழாலை பெரியதம்பிரான்
10. ஊரிக்காட்டுக் கிணறு
11. நாவற்குளக் கிணறு
12. சிறுவிழான் கிணறு
13. வேம்பிராய் - சாவகச்சேரி
14. மாயக்கைக் குளம் - பருத்தித்துறை
15. சின்னக்கண்டான் - வல்லை
16. மாயக்கை
17. கீலன்

## தரைக்கீழ் நீரின் சேமிப்பும் வளமும்

பெறப்படும் மழையில் குறிப்பிடத்தக்க பங்கு கடலையடைகின்றது. ஆராய்ச்சி செய்யப்பட்ட ஆண்டின்படி ஆண்டுக்கு 50 000 ஏக்கர் அடி நீர் இவ்வாறு செல்லுகின்றது. மழையின் இன்னொரு பங்கு தரைக்கீழ் நீராகச் செல்லுகின்றது. நிலத்தின் ஊடுபுகவிடும் இயல்புக்கு (Percolation of rainfall) ஏற்ப இது நிகழும். பொதுவாக மழைவீழ்ச்சிக்கு ஏற்ப தரைகீழ் நீர் மட்டமும் வேறுபடும். மேலும் மனித பாவனையால் நீர் வெளியேற்றத்தின் போதும் இம் மட்டம் வேறுபடும். 1965, 66, 67, 68 ஆண்டுகளில் நிகழ்த்தப்பட்ட ஆய்வின்போது அவதானிக்கப்பட்டதன்படி சாதாரண ஒரு வருடத்தில் (1966) மழை மூலம் 90,000 ஏக்கர்

www.padippakam.com

அடி நீர் தரைக்கீழ் நீராகச் செல்லுகின்றது. இந்த ஆண்டில் கடலுக்கு 50,000 ஏக்கர் அடி சென்றுள்ளது. இந்த அளவுகளைச் சராசரியாகக் கொள்ளலாம். மழைவீழ்ச்சி குறையும்போது இந்நிலை குறையலாம். உதாரணமாக 1965 இல் 50,000ஏக்கர் அடி நீர் மழையாகப் பெறப்பட்டது. இதில் கடலுக்கு 10,000 ஏக்கர் அடி சென்றது. 1967 ஆம் ஆண்டு அதிக மழைவீழ்ச்சி பெறப்பட்டது. இந்த ஆண்டு 177,000 ஏக்கர் அடிமழையாகப் பெறப்பட்டது. இதில் 137,000 ஏக்கர் அடி நீர் தரைக்கீழ் நீராக அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது. பொதுவாக வீட்டுத் தேவைக்காக 17,000 ஏக்கர் அடியாகவும், விவசாயத் தேவைக்காக 28,000 ஏக்கர் அடியாகவும் தரைக்கீழ் நீர் வெளியேற்றப்படுகின் றது. சில சமயங்களில் தரைகீழ் நீர் கொள்ளும் அளவுக்கு மேல் சேமிப்பாக மாறினால் நிலநீர் ஊற்று களாகக் கடலினுள் வெளியேற்றப்படுகிறது.

பாவனை காரணமாகக் குறிப்பிடத்தக்க அளவு நீர் வெளியேற்றப்படுகிறது. முன்கூறியவாறு விவசாயப்பாவனை, வீட்டுப்பாவனை என இரண்டு வகையாக நோக்கினாலும் நாகரீகப் பாவனையாலும் நீர் வெளியேற்றப்படுகின்றது, குடா நாட்டில் மின்சக்திப் பாவனை பரவலாக்கப்பட்ட 1970, 1980களில் இப்பாவனைகள் மிக அதிகரித்துக் காணப்பட்டது. 1967,68 களில் நடைபெற்ற ஆராய்ச்சியின் போது பின்வரும் நிலைகள் பெறப்பட்டன.

## யாழ்ப்பாணக் குடாநாட்டின் சுண்ணாம்புப் பாறையின் தரைக்கீழ் அமைப்பு



www.padippakam.com







படிப்பகம்

| | நன்னீர் வளம் | பாவனை |
|---|---|---|
| 1. யாழ்ப்பாணக் குடாநாட்டின் மத்திய பகுதி (வலிகாமம்) | 62400 ஏக் அடி | 10,000 ஏக் அடி |
| 2. கிழக்குக் குடாநாடு | 70000 ஏக் அடி | 600 ஏக் அடி |
| 3. தீவுப் பகுதி | 12000 ஏக் அடி | 3300 ஏக் அடி |

கிழக்கு குடாநாடு தவிர ஏனையவற்றைப் பார்க்கும் போது ஒரு ஏக்கருக்கு 1/6 தொடக்கம் 1\4 வரையான ஏக்கர் நீர் வெளியேற்றப்படுகிறது (Draw off )எனக் கொள்ளலாம். கடந்த தசாப்தத்தில் கிழக்குக் குடாநாட்டில் தென்மராட்சியிலும், மத்திய குடாநாட்டிலும் (வலிகாமம்) பாவனைக்கு எடுக்கப்பட்ட நீர் மேற்குறிப்பிட்ட அளவிலும் இரண்டு மடங்கு ஆக இருக்க வேண்டும்.இதனால் நன்னீர் மட்டம் கீழிறங்குகிறது. இது உவர்நீர் உள்வருகைக்குக் காரணமாகின்றது. குறிப்பாக வரண்ட பருவத்தில் மட்டம் குறைய உவர், நீர் வேகமாக உள்வருகின்றது. உவர் நீர்ப்பகுதிகளில் அதாவது 12450 ஏக்கர் பரப்பில் 6350 ஏக்கர் அடி வெளியேற்றப்படுகிறது. அதாவது ஒரு ஏக்கருக்கு 1/2 ஏக்கர் அடி நீர் வெளியேற்றப்படுகிறது. இவ்வாறு பார்க்கிறபோது 1960 களின் பிற்பகுதி ஆராய்வின்படி வருடத்துக்கு விவசாயக் கிணறு ஒன்றில் இருந்து 1.5 ஏக்கர அடி நீரும், வீட்டுக் கிணறு ஒன்றில் இருந்து 0.3 ஏக்கர் அடி நீரும் வெளியேற்றப்பட்டிருக்கிறது. இந்நிலமை 1980 களில் இரண்டு மடங்கு ஆகிவிட்டது.

## வளமும் மீள் நிரம்பலும் பாவனையும்
(Recharg and Draw off)

நீர்ப்பாவனையால் தரைகீழ் நீர் மட்டம் பாதிக்கப்படுகிறது. குறிப்பாக மீள் நிரம்பல் அற்ற வரண்ட மாதங்களில் பாவனை மட்டுப்படுத்த வேண்டும். படத்தில் காட்டப்பட்டுள்ளதின் படி மீள் நிரம்பலையும். பாவனையையும் பார்க்கலாம். எமக்கு கிடைக்கின்ற மழையில் ஒக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் 75% மேல் பெறப்படுகின்றது. இக் காலம் தான் மீள் நிரம்பலுக்குரிய காலமாகும். மழை குறைவான வருடத்தில் குறைவாகவும், மழை கூடிய வருடத்தில் அதிகளவும் மீள் நிரம்பலுக்குப் பயன்படும். உதாரணமாக மழை குறைந்த வருடமான 1966 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தரைகீழ் நீர் இருப்பு 7.27 10.4 ஏக்கர் அடியாக இருந்தது. இதே ஆண்டில் ஒக்டோபர் மாதம் 12" மும் நவம்பர மாதம் 6" மும் டிசம்பரில் 6" மும் மழையாகப் பெறப்பட்டது. இதே சமயம் மழை கூடிய 1967 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தரைகீழ் நீர் இருப்பு ஏக்கர் அடி (177000 ஏக்கர அடி ) 17. 7 104 ஆக அமைந்தது. இந்த ஆண்டு ஒக்டோபர் 4" மும், நவம்பர் 24"மும், டிசம்பர் 23" மும் மழையால் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அட்டவணை 3

| | ஒக்டோ | நவம்பர் | டிசம்பர் | |
|---|---|---|---|---|
| 1966 | 12" | 6" | 6" | $7.27 \times 10^4$ |
| 1967 | 4" | 24" | 23" | $17.7 \times 10^4$ |
| 1968 | 4" | 10" | 6" | $7.75 \times 10^4$ |
| 1969 | 18" | 15" | 21" | $12.58 \times 10^4$ |

நன்னீர் வளம்

நன்னீர் வளம் என்பது நீர் கொண்டுள்ள உவர்த்தன்மையின் விகிதத்தில் தங்கியுள்ளது. கடந்த தசாப்தங்களில் நீர்வளச் சபையினால் (water Resource Board) ஒவ்வொரு மாதமும் தெரிவுசெய்யப்பட்ட கிணறுகளில் இருந்து நீர்மாதிரிகள் பெறப்பட்டுப்பரிசோதனை செய்யப்பட்டு எவ்வெவ் இடங்கள் எத்தகைய நீரினைக் கொண்டுள்ளன என பாகுபடுத்தப்பட்டுள்ளன. அது மட்டுமன்றி ஆறுமுகம், பாலேந்திரன், சிறிமானே என்பவர்களாலும் சில குறிப்பிட்ட ஆண்டுகளின் ஆராயப்பட்டுள்ளது. பொதுவாக 1 மில்லியனுக்கு எத்தனை அலகுகள் குளோரைட் காணப்படுகிறதோ அதற்கேற்ற விதத்தில் உவர்த்தன்மை வேறுபடும். (Chloride Ions in parts per million) உவர்த்தன்மையை பின்வருமாறு கூறலாம்

| | |
|---|---|
| நன்னீர் | 150 ppm மனிதபாவனைக்கு உகந்தது. |
| சாதாரண நீர் | 150 - 500ppm மனித பாவனைக்கு உகந்தது. |
| சவர் நீர் | 500 - 1000 ppm |
| உவர் நீர் | 1000ppm |
| கடல் நீர் | 20,000 ppm |

விளக்கப்படம் -2 யாழ்ப்பாணக் குடாநாட்டில் இந்த உவர்த்தன்மையை எடுத்துக் காட்டுகிறது.

பின்வரும் விதத்தில் 5 பகுதிகளாக நோக்கலாம்.

| | |
|---|---|
| அ. நன்னீர்ப் பகுதிகள் | 500 ppm |
| ஆ. நடுத்தர உவர்த்தன்மை பகுதிகள் | 500 -1000ppm |
| இ. நடுத்தர உவர்த்தன்மை பகுதிகள் நீர் வெளியேற்றத்துடன் உவர்த்தன்மை அதிகரிக்கும் பகுதிகள் | 1000 - 2000 ppm |
| ஈ. வரண்ட பருவத்தில் உவர்த்தன்மை கொண்ட பகுதிகள் | 1500 - 2000ppm |
| உ. உவர்நீர்ப் பகுதிகள் | 2000 |

அட்டவணை: 4

| | 1965 -1966 | 1966 - 1967 | 1967 - 1968 |
|---|---|---|---|
| நன்னீர்ப் பகுதி | 128100 | 142780 | 145000 |
| நடுத்தர உவர்த்தன்மைப் பகுதி | 64200 | 64000 | 60,350 |
| வரண்டபருவ உவர்ப்பகுதி | 46480 | 43800 | 47800 |
| உவர்நீர்ப் பகுதி | 17290 | 11000 | 12450 (ஏக்கர் பரப்பு ) |

இதன்படி யாழ்ப்பாணக் குடாநாட்டில் சராசரியாக 145,000 ஏக்கர் பரப்பு நன்னீரைக் கொண்டுள்ளது. குடாநாட்டின் மொத்தம் பரப்பான 260,000 ஏக்கரில் 56% நன்னீர் பரப்பாக அமைந்தமை எமது அதிஷ்டம் என்றே கொள்ள வேண்டும். பருவ ரீதியாகவும் உவர்த்தன்மை வேறுபடும். 1981 ஆம் ஆண்டின் மாரிப்பருவ மாதமான டிசம்பர்,வரண்ட பருவமாதமான யூன் இரண்டையும் ஒப்பிட்டால் பின் வரும் நிலை காணப்படுகிறது. மாரியில் மேற்பரப்பு உவர்த்தன்மை அதிகரிப்புக்குக் காரணம் கொண்டுள்ள உவர் அல்லது சவாத்தன்மையாகும்.

| | | டிசம்பர் | யூன் |
|---|---|---|---|
| நன்னீர் | 500 | 130723 | 125719 |
| நடுத்தரநீர் | 500- 1000 | 18406 | 32169 |
| நடுத்தர உவர்த்தன்மை | 1000 - 1500 | 7930 | 6610 |
| வரண்ட உவர் - உவர்நீர் | 1500 | 383300 | 41861 (ஏக்கர் பரப்பு) |

## தரைகீழ்நீர்ப் பாவனை

யாழ்ப்பாணக் குடாநாட்டில் 84,000 கிணறுகள் இருக்கின்றன. இதில் 66,000 வீட்டுத் தேவைக்காகவும், 18, 000 பயிர்ச் செய்கைக்காகவும் பயன்படுகின்றன. உரும்பிராய், ஊரெலு,மல்லாகம், உடுவில் பகுதிகளில் ஒவ்வொரு 100 ஏக்கருக்கும் இத்தொகை 152, 129 உள்ளது. இப்பகுதிகள் தான் கூடிய நீர்ப் பாவனைப் பகுதிகளாகும். தரைக்கீழ்நீர் சேமிப்பு 1967 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத் தரவின் படி 17.7 10 ஏக்கர் அடியாக உள்ளது. இதில் 28,000 ஏக்கர் அடி நீர் வருடத்துக்கு பயிர்ச்செய்கைக்குத் தேவைப்படுகிறது. இதற்காக ஒவ்வொரு கிணற்றில் இருந்தும் வருடத்துக்கு 12/1 ஏக்கர் அடி நீர் வெளியேற்றப்படுகிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் மொத்தப் பரப்பில் 60% வாழுமிடத்தையும், வீட்டுத்தோட்டங்களையும் கொண்டது. 13% (34,000 ஏக்கர்கள் ) பழவகை, உபஉணவு பயிரிடும் பரப்பாகும். நெற்பயிர் (32,000 ஏக்கர்) 12 2/1 உள்ளடக்குகின்றது. கடனீரேரி 10 % மிகுதி 4 2/1 % பயன்படுத்தப்படாத நிலமாக உள்ளது.

## நீர் சேமிப்பு

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நீர் கிடைக்கும் முறை, அதனுடைய வளம், அதனில் நன்னீர் வளம், அதன் பாவனை ஆகியன இது காறும் விளக்கப்பட்டுள்ளது. எனவே இவற்றைப் பேணி அதற்கு உயிர் நாடியான சேமிப்பும், பாதுகாப்பும் நாம் மேற்கொள்ளக்கூடிய முதலாவது நடவடிக்கையாகும். குறிப்பாக மாணவர்களுக்கு இது பற்றிப் புகட்டவேண்டியது நமது கடமையாகும். ஆசிரியர்களுக்குத் தெரிந்தாலே மாணவர்களுக்குப் புகட்ட முடியும். அரசாங்கத்தினால் வெளியிடப்படும் சூழற்கல்வியில் யாழ்ப்பாணக் குடாநாடு பற்றியோ, சுண்ணாம்புக்கற்பகுதி பற்றியோ, தரைகீழ்நீர் பற்றியோ அரிதாகத்தான் காணப்படுகிறது.

பெறப்படும் மழைநீரை அதாவது மூன்று மாதங்களில் பெறப்படும் மழைநீரை அந்தந்த மாதங்களிலேயே சேமிக்க வேண்டும். இதனை இரண்டு வழிகளில் செய்யலாம். ஒன்று கோடை காலத்தில் செய்வது, மற்றது மாரிகாலத்தில் செய்வது, முன்கூறியது போன்று யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குளங்கள் காணப்படுகின்றன். இவற்றில் பெரும்பாலானவை கோடையில் வற்றிக் காணப்படும்.

அட்டவணை: 5

முக்கிய குளங்கள்

| | | | |
|---|---|---|---|
| வடமராடசி தெற்கு, மேற்கு | 4 | பச்சிலைப்பள்ளி - 1 | 33 |
| வலிகாமம் | 1 | வடமராட்சி தெற்கு | 32 |
| யாழ்ப்பாண நகரம் | 10 | பச்சிலைப்பள்ளி -2 | 17 |
| வலிகாமம் மேற்கு | 1 | தென்மராட்சி | 293 - 1075ஏக்கர் அடி |
| வலிகாமம் வடக்கு | 21 | தீவுப்பகுதி தெற்கு | 31 |
| வடமராட்சி கிழக்கு | 25 | தீவுப்பகுதி வடக்கு | 37 |
| வடமராட்சி | 4 | நெடுந்தீவு | 34 |

இக்குளங்கள் ஏறக்குறைய 2500 ஏக்கர் அடிநீரை தேக்கவல்லவை. இக்குளங்களைத் கோடையில் துப்பரவுசெய்ய வேண்டும்.குளங்களில் அடியில்படிந்து கிடைக்கும் வண்டல்களை (Desilting) துப்பரவு செய்ய வேண்டும். நீரின் உட்புகவிடும் துவாரங்களைச்செவ்வனே இயங்கச் செய்யவேண்டும். முன்பு கிராமங்களில் பசளையின் பொருட்டு இதனைச் செய்தனர். ஆனால் இப்போது அந்த முறைமை இல்லை. ஆயினும் ஊற்று நிறுவனத்தினர் கடந்த சில ஆண்டுகளாக இதனைச் செய்து வருகின்றனர். ஊற்று நிறுவனம் 1986 இல் 34, 1987 இல் 02 1988 இல் 17, 1991 இல் 50 குளங்களை, துப்பரவு செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஊற்று நிறுவனத்தினரால் 31 குளங்களும், உவர் நீர்தடுப்பு அணைகளான அராலி, சிலிந்து, தனங்களப்பு, அரியாலை ஆகியனவும், 32 வாய்க்கால்களும், வழுக்கை ஆற்றுப்பகுதி, உசன்பகுதி ஆகியனவும் துப்பரவு செய்யப்பட்டுத் திருத்தப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். இதனை அனைவரும் பின்பற்ற வேண்டும். சிரமதான மூலமும் செய்யலாம். பாடசாலைகள், சமூக நிறுவனங்கள் மூலமும் செய்யலாம். குளங்களை நோக்கிப் பல வாய்க்கால்கள் இருக்கின்றன. சிலசமயம் கோடைப் பருவத்தில் பாதைகளாகவும் பாவிக்கப்படுகின்றன. இந்த வாய்க்கால்களையும் துப்பரவு செய்து மழைநீர் இலகுவில் குளங்களை அடையச்செய்ய வேண்டும். குளங்களைச் சுற்றி அணைகட்டுதல் முன்பு நடந்து வந்தது. முன்பு இயங்கிய கிராமச் சங்கங்கள் இதனை நடத்தின. இப்போது அவை இல்லை. இதையும் பழையபடி ஆரம்பிக்க வேண்டியுள்ளது. முன்பு சில ஆழமற்ற குளங்களில் மண், மக்கி போன்றவற்றை எடுத்துச் சில தேவைகளுக்குப் பாவித்தனர். பின்பு அது தடுக்கப்பட்டுவிட்டது. ஆகவே குளங்கள் ஓரளவு ஆழமாக்கப்படவும் வேண்டும். இவ்வாறு குளங்களை அண்டிய இந்த அபிவிருத்திகள் கோடைப் பருவத்தில் செய்யவேண்டியது அவசிய மாகின்றது. இதே போன்று கிணறுகளையும் துப்பரவு செய்யலாம்.

வயல் நிலங்களில் வரம்பு கட்டுதல் முன்பு வழமையாகன நடைமுறை, கட்டுதல் முன்பு வழமையான நடைமுறை. அதனையும் நடைமுறைப்படுத்த வேண்டும். அது மட்டுமன்றிக் கடற்கரையின் பரந்த வெளிகளில் கடல்நீர் உள்கோக்கி வராமலும், மழைநீர் வெளிச் செல்லாமலும் அணைகள் கட்டுப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும். இவ்வாறான சில அணைகள் ஏற்கனவே உள்ளன.

அட்டவணை: 6

வடிகால், வெள்ளத்தடுப்பு, உப்புநீர்த்தடுப்பு அணைகள்

**Drainage, Flood, Protection and Salt Water Exclusion Schemes**

| கெக்டேயர்கள் | | கெக்டேயர்கள் | |
|---|---|---|---|
| 1. தொண்டமானாறு | 259 | 10. மண்கும்பான் | 243 |
| 2. காலிகுளம் | 121 | 11. அல்லைப்பிட்டி | 10 |
| 3. மெலிஞ்சிமுனை | 121 | 12. மண்டைதீவு | 162 |
| 4. முதலிக்குளி | 91 | 13. மடத்துவெளி | 81 |
| 5. குறுக்குக் கடல் | 122 | 14. தேவனிபுலம் | 121 |
| 6. அராலி | 810 | 15. உப்புக்குளி | 91 |
| 7. அரியாலை | 130 | 16. சோழரோடை | 132 |
| 8. சரவணை | 162 | 17. காளி ஆறு | 16 |
| 9.நாரந்தனை | 101 | 18. மணியன் வாய்க்கால் | 101 |

மேற்கூறியவற்றைக் கோடைப் பருவத்தில் செய்திருந்தால் மாரிப் பருவத்தில் பெறப்படும் மழைநீர் தேக்கப்படும். அல்லாவிடில் வீணே கடலை அடைந்துவிடும். அதிக மழைபெறும் போது தரைக்கீழ் நீரின் மீள் நிரம்பல் அதிகமாக இருக்கும். எனவே அதிக மழைபெறும் காலத்தில் வெள்ள அபாயம் என்று கூறி வெள்ளத்தைக் கடலுக்கு விடலாகாது. இயன்றளவு குளங்களிலும், வயல் வளவுகளிலும் நீரைத் தேக்க வேண்டும். இவ்வாறு தேக்கும் போது தரைகீழ்நீர் மட்டம் அதிகரிப்பது மட்டு மல்லாமல் உப்புநீர் பகுதிகள் நன்னீர் பகுதிகளாக மாறக்கூடிய வாய்ப்பும் உண்டு. எமது பிரதேசத்தில் 2,3 நாட்களுக்கு மேல் வெள்ளம் உயர்ந்த பகுதிகளில் தங்குவது இல்லை. இதனால் வெள்ள அபாயம் என்பது இல்லை. எந்தக் குளத்தையும் மூடுவது என்ற எண்ணம் கூடாது. கிராம நகர அபிவிருத்தி என்று கூறிக்கொண்டு குளங்களை மூடினால், அவற்றின் வாய்க்கால்களை மூடினால் நமது மூலவளத்தை நாமே அழிப்பது என்று பொருள்படும், எமது மேற்பரப்பு நீரில் ஆவியாக்க ஆவியுயிர்ப்பாக 78% செல்கின்றது. ஆகவே நீரை தரைகீழ் நீராக மாற்ற ஆகவேண்டியவற்றைச் செய்யவேண்டும். குடாநாட்டு நீர் வில்லைகள் கடனீரேரிகளால் ஊடறுக்கப்படுகின்றன. மத்திய குடாநாட்டு நீர் வில்லை பெரிது. பரப்புக் கூடியது. ஆழமும் கூடியது. இங்குதான் புத்தூர்க் கிணறு உண்டு. பளைப்பிரதேச வில்லை சிறியது. தீவுகளின் வில்லைகள் மிகச்சிறியது. ஆகவே இங்கு கூடிய நீரை உட்புகுத்த வேண்டிய நிலைமை உண்டு. சிலவேளை ஆகக் கூடியளவு நீர் தரைக்கீழ் நீராக மாற்றப்பட்டால் நிலத்தில் கீழ் உள்ள ஊற்றுக்களால் நீர் கடலையடைகின்றது. இதனைக் கொங்கிறீற்தடைகள் போட்டுத்தடுக்க வேண்டும் என அறிஞர்கள் கூறுகின்றனர். அதேபோன்று குடாநாட்டில் காணப்படும் கடனீரேரிகளை நன்னீர் எரிகளாக மாற்றுவதும் ஒரு திட்டம். ஆனையிறவுக் கடனீரேரி, தொண்ட மானாறு போல ஏனையவற்றிலும் இதனால் கூடியளவு நீர் தேக்கப்படக்கூடிய வாய்ப்பு உண்டு. ஆனால் உயிர்ச் சூழலை இச்செயல் பாதிக்கலாம். நீரேந்து பரப்புகளையண்டித் தாவரங்களை வளர்த்தல், படர்த்தாவரங்களைப் பயிர்செய்தல் என்பன ஆவியாக்கத்தினையும், ஆவியுயிர்ப்பினையும் தடைசெய்யும்.

## நீர்ப் பாவனையும் பேணுகையும்

எமது கூடிய நீர்ப்பாவனைதான் நீர் பேணுகையைப் பற்றிச் சிந்திக்க வைத்துள்ளது. இலங்கைக்கு இந்தியாவிலும் இருந்து குடியேற்றம் ஏற்பட்டதாகக் கூறுவர். இது கடல் மூலமும், தரை மூலமும் நடந்திருக்கலாம். வரலாற்று ஆசிரியர்களின் படி (Ragupathy, 1987) இராமர் அணை ஊடாகக்கிறிஸ்து சகாப்த கால ஆரம்பத்துக்கு முன்னும், பின்னும் இலங்கைக்கு மக்கள் குடியேறியுள்ளனர். இவ்வாறு வந்தவர்களில் முதலாவது தொகுதி தெற்கு நோக்கிப் போக இரண்டாவது தொகுதி வடக்கு நோக்கி வந்தது. இவர்களையும் தெற்கு நோக்கிப் போகாமல் தடுத்தது இங்கு காணப்பட்ட தரைகீழ் நீராகும். மீண்டும் பல கட்டங்களிலும் இந்த குடிப்பரம்பல் நிகழ்ந்த போதும் நன்னீரை இலகுவாகப் பெறக்கூடிய இடங்களில் குறிப்பாக ஆனைக்கோட்டை, மண்கும்பான், கௌதாரிமுனை, நாகர்கோவில் போன்ற இடங்களில் தான் மக்கள் வாழத் தலைப்பட்டனர் எனப்படுகிறது. இன்று 7 லட்சம் மக்கள் வாழ்கின்ற யாழ்ப்பாணக் குடாநாட்டில் பல தேவைக்காக நன்னீர் பயன்படுத்தப்படுகிறது. முன்கூறியது போன்று வாழ்விடத்தேவை, விவசாயத்தேவை, சுகாதாரத்தேவை,கைத்தொழில் தேவை, நாகரீகத்தேவை, எனப் பெருகியவண்ணம் சென்றுவிட்டன. இதனால் நன்னீர் மட்டம் மிக வேகமாகக் குன்றுதலும், நன்னீர் உப்பு நீராக மாற்றமடைதலும் அனுபவரீதியாக அறிந்த உண்மை. எனவே நாம் அதிக நீரை வெளியேற்றுதலைக் கட்டுப்படுத்த வேண்டும்.

முன்கூறியதுபோன்று மேற்குறிப்பிட்ட தேவைகளுக்காக சராசரி 50,000 ஏக்கர் அடிநீர் பயன்படுத்தப் படுகிறது. இத் தொகை தரைக்கீழ் நீர் இருப்பில் ஏறக்குறைய 1/3 என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். இது தொடர்ந்துவரும் மழைக்காலத்தில் ஈடுசெய்யப்பட வேண்டும். வருடத்தில் சாதாரணமாக 90,000ஏக்கர் அடி தரைக்கீழ்நீராக மாற்றமுறுகின்றது. தொடர்ந்துவரும் மழைக்காலம் வரட்சியானதாக அமைந்துவிட்டால் பாவனைக்குட்பட்ட நீர் ஈடுசெய்ய முடியாமல் போய்விடும். முன்பு தரைக்கீழ் நீர் மட்டம் உயர்ந்து இருந்தபோது எவ்வாறு நீர் ஊற்றுகளாக நீர் வெளியில் பாய்ந்ததோ அதே போன்று கடல்நீர் உள்நோக்கிவரும். அதுமட்டுமன்றி நன்னீர் வில்லைகளின் ஓரங்கள் படிப்படியாக உப்புநீராக மாற்றமடையும். எடுத்துக்காட்டாக 1965 இல் மழை குறைந்த போது 10,000 ஏக்கர் அடி நீர் தான் தரைக்கீழ் நீராக மாற்றம் பெற்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. பாவனையில் யாழ்ப்பாணம் உள்ளிட்ட வலிகாமம் உள்ளடங்கிய பிரதேசம் சராசரி 10,000 ஏக்கர் அடி நீரைப்பாவிக்கிறது. அதற்கு அடுத்ததாகத் தீவுப்பகுதிகள் முன்கூறியது போன்று 3300 ஏக்கர அடி நீரைப் பாவிக்கிறது. ஒரு ஏக்கருக்கு 1/6 - 1/4 ஏக்கர நீர் வெளியேற்றப்படுகிறது. கிழக்கு குடாநாட்டின் பாவனை குறைவு. இதற்கு இப்பகுதிக் குடித்தொகையும் காரணமாகின்றது. ஆகவே நீர்ப்பாவனையைப் பொதுமக்கள் குறைக்க வேண்டும். பெற்றோர்களுக்கு மாணவர்கள் கூடிய நீர்ப்பாவனையால் வருகின்ற பெரும் அபாயத்தைச் சுட்டிக் காட்டவேண்டும். நீர்வளம் குன்றிய நாடுகளில் நீருக்கு பணம் அறவிடப்படுகிறது. கொழும்பு மாநகரத்திலும் அறவிடப்படுகிறது. இதேபோன்று அளவுக்கு அதிகமாக நீர்பாவனைசெய்பவர்களிடம் இருந்தும், மழையற்ற மாதங்களில் நீர்ப்பாசனம் மூலம் பயிர்செய்பவர்களிடம் இருந்தும் ஒருவகை வரியை அறவிட்டால் கூடியநீர் பாவனையைக் குறைக்கலாம். வரண்ட மாதங்களில் நீர் இறைப்பைப் பெருமளவு தடைசெய்ய வேண்டும். வீட்டுக்கு வீடு மின்சக்தியில் இயக்கும் இயந்திரங்களைப் பூட்டியபின் நீர்ப்பாவனை கூடியுள்ளது எனலாம். இதுவும் கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

குழாய் மூலமான நீர் விநியோகத்தினாலும் நீர் வீணடிக்கப்படலாம். எந்த நேரமும் நீரைச் செலவழிப்பதுடன், நீர்ச் சேமிப்பையும் தொடர்ச்சியான விநியோகம் குறைக்கின்றது. நன்னீர் வில்லை குறைந்த தடிப்புக்கொண்ட தீவுப்பகுதிகளின் குழாய் நீர் விநியோகம் மிக விரைவாக உப்புநீர் மாற்றத்தைக் கொண்டுவரும். தரைக்கீழ் நீர் பாவனையைக் குறைத்து மழைநீர் பாவனையை அதிகரிக்க வேண்டும். வீடுகளின் கூரைச் சாய்வு நீரைச் சேகரிக்கத் தொட்டியைக் கட்டி நீரைப் பாவிக்கும் வழக்கம் உண்டு. இது புங்குடுதீவில் உண்டு. ஏனையோரும் அதனைப் பின்பற்றலாம். அரசாங்க ஆஸ்பத்திரியில் இவ்வாறு கூரையில் பெறப்படும் நீரைப் பெரும் தொட்டிகளில் சேகரித்துப் பின்பு சுத்தகரித்துப் பாவிப்பது வழக்கம். உதாரணம் ஊர்காவற்றை ஆஸ்பத்திரி, ஆகவே தரைக்கீழ் நீரைச் சேமிக்க நாம் பல வழிகளில் முயற்சி செய்ய வேண்டும்.

## நீர் அசுத்தமடைதல்

நீர் அசுத்தமாகுதல் நிலப்பயன்பாடு ரீதியாக மாறுபடுவது. நெருக்கமாக மக்கள் வாழும் இடங்களிலும், விவசாயப் பிரதேசங்களிலும் நீர் மாசடைகின்றது. இதில் முன் நிற்பது யாழ்ப்பாண மாநகரப் பகுதி அதிலும் குறிப்பாக ஆஸ்பத்திரி, மத்திய வர்த்தக மையம். விவசாயப் பிரதேசங்கலும் (Chloride conecntration) குளோரைட் அளவு அதிகமாவதுடன் அது தரைக்கீழ் நீரின் ஆழப்பகுதிக்குள் செல்லுகின்றது. இது ஒரு லீற்றருக்கு 400 மில்லி கிராம் இலிருந்து 900 மில்லி கிராம் வரை வேறுபடுகிறது. இதனால் நன்னீர் மேற்படை கூடிய உப்பு நீராக மாற்றமடைய வழியேற்படுகிறது. கூடியநீர் இறைப்புக் காரணமாக வரண்ட மாதங்களில் உவர்த் தன்மையை யாழ்ப்பாணக் குடாநாட்டின் 23 % மான பரப்பு கொண்டிருக்கும். டிசம்பரில் இது 10% மாகக் குறையும். ஆயினும் 23% பரப்பு நடுத்தரமான உப்பு நீரையே கொண்டுள்ளது என்றால் மிகையாகாது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கூடியமக்கள் தொகை ச.கி. மீற்றருக்கு 430 மேல் காணப்படுகின்றது. மொத்தப் பரப்பில் 60 % இல் மக்களும் வீட்டுத் தோட்டங்களும் 13 % இல் உபஉணவுப் பயிர்களும், 12 1/2 % இல் நெற்பயிரும் உண்டு. விவசாயப் பிரதேசங்கள் செயற்கை உரப் பாவிப்பு காரணமாகவும், கிருமிநாசினி காரணமாகவும் நீர் நஞ்சாவதைக் கொண்டிருக்கின்றன. வழமையாக நீர் கொண்டிருக்க வேண்டிய நைட்ரேட்டின் அளவு லீற்றருக்கு 100% - 150% (WHO) ஆகும். இங்கு விவசாயக் கிணறுகளில் 50% மானவை லீற்றருக்கு 45 - 150 மி.கிறாம் வரை கொண்டுள்ளன. வீட்டுக் கிணறுகள் 45 - 250 மி. கிறாம் வரை கொண்டுள்ளன. செம்மண் பகுதிகளில் கூடுதலான நைட்ரேட் அளவு உண்டு. சராசரியாகப் பார்க்கும் போது 1980 களில் 130 - 150 மில்லி கிறாம் உண்டு. சில உரவகைகளில் இதன் அளவு பின்வறுமாறு வேறுபடும்.

www.padippakam.com

யூரியா 40%
டி. டி. எம் 39%
அம்மோனியம் சல்பேட் 21%

இவை மண்ணின் ஊடாக நிலநீருடன் கலக்கின்றன. நீர்வளச் சபையின்படி கிணற்றுக்கும், மலசலகூடத்துக்கும் உள்ள தூரமும் நைட்ரேட்டின் தன்மையைத் தீர்மானிக்கிறது. இது பின்வருமாறு வேறுபடும்.

| இடைத்தூரம் | லீற்றர் / நைட்ரேட் மில்லி கிறாம் |
|---|---|
| 9.5 மீ | 36 ” |
| 14.8 மீ | 25 ” |
| 16.5 மீ | 15.2 ” |

எனவே மலசலகூடம் கிணற்றுக்குச் சேய்மையில் இருக்க வேண்டும். யாழ்ப்பாண நகரப் பகுதிகளிலும், ஏனைய சிறு நகரப் பகுதிகளிலும் நைட்ரேட் உருவாக்கம். பக்டீரியா கிருமி கிணற்றுக்குள் செல்வது நிகழ்கின்றது. இதற்குப் புனருத்தாரண அமைப்பாகச் செயற்படவேண்டிய தேவை உண்டு.
கைத்தொழில் ரீதியான மாசு படல் மட்டுமல்ல நீர்வளப் பாதிப்பும் காங்கேசன்துறை சீமெந்து ஆலையால் ஏற்படுகின்றது. மிக்க நீர் கொண்ட பகுதியின் சுண்ணாம்புக்கல் பெருமளவுக்கு எடுக்கப் பெற்றால் மேற்படை பாதிக்கப்பட்டுத் தரைகீழ் நீர்மட்டம் பாதிக்கப்படும்.

இவை தவிர சமூக ரீதியாக மக்கள் நீரை அசுத்தமாக்குகின்றனர்.
1. வாய்க்கால்களில் குப்பை கூளங்களைக் கொட்டுதல், நச்சுப் பொருட்களை வீசுதல்.
2. பாவனையற்ற கிணறுக்குள்ளும் இவ்வாறு தேவையற்ற பொருட்களை வீசுதல்.
3. குளங்கள் போன்ற நீரேந்து பிரதேசங்களை வேறுவிதமாக அசுத்தப் படுதல்.
4. நீர் தாங்கும் படுக்கையான மணல் பகுதிகளை அகற்றுதல்.
5. நீரைப் பாதுகாக்கும் தாவரப்பரம்பலை அழித்தல்.
6. தேவைக்கு அதிகமான கிருமிநாசினிகள், உரமாக்கிகளைப் பாவித்தல்.
7. கிணற்றுச் சுற்றாடலை அசுத்தமாக்கி பக்டீரியா கிருமி வாளி மூலம் கிணற்றினுட் செல்ல வைத்தல்.
8. உயிர்ச்சூழலியலை நிர்மூலமாக்குதல்.
9. கடற்கரை யோரங்களில் மண் அகற்றுதல்
10. திருட்டுத்தனமாக வயல்நீரை வெட்டுதல், கடலுக்கு விடுதல் போன்றன.

## உசாத்துணை நூல்கள்

1. Balendran. V. S. C, H. J. Sirimanne and Arumugam. m.(1968) . Ground water in Jaffna. Water Resources Board, Colombo.
2. Cooray. P.G.(1967) An Introduction of Geology of Ceylon.
3. Katz. M B. (1978) ‘sri Lanka in Gondwana Land and the evolution of the Indian Ocean , Geological Magazine Vol.115, No 4
4. National Atlas of Sri Lanka (1988), Survey Department, Sri Lanka
5. Ragupathy .P. (1987). Early Settlements in Jaffna, An Archaeological Survey , Madras,India.



படிப்பகம்

www.padippakam.com


With the best Compliments
from

Jawaharlal Nehru Family

# West bouvna Food & Wine

No1 West bouvna Ave
Cannock
WS11 2AN

# Ganassa Service

A5 Wattling St
Bridge Town
S11 3VG

# Stretton Garage

A5 Watting St
Brewood
Staffordshire
ST19 9LN


படிப்பகம்

www.padippakam.com

# Velanai M.M.V O.S.A U.K
## Committee Members

Patron: Mrs.V. Shanmuganathan
President: Mr. R. Sivathas
vice - President: Mr. V. Yoganathan
Secretary: Mrs. R. Jeyabalini
Asst. Secretary :Mrs. M. Rajeswaran
Treasurer: Mr. N. Balachandran
Asst. Treasurer: Mr.S. Balasundaram
Editors: Mr. R. Murugaverl
Mr.S. Balasubramaniam
Mr.T. Thirkumaran

**Committee Members:**
Mr. Siva. Aathithan
Mr. P. Sritharan
Mr. K. Nageswaran
Mr. K. Rajeswaran
Mr. T. Sivakumaran
Mr. B. Raveendran
Mr. T. Maheswaran
Mr. E. Uthayakumar
Mr. P. Sateeshwaran
Mr. P. Jeevakaran
Mr. M. Manran
Mr. M. Sivapathalingam

## மலர்குழு

**S.பாலசுப்பிரமணியம்**
**M.சிவபாதலிங்கம்(வேலணையூர் சிவா)**
**T.திருக்குமாரன்**

## வேலணை மத்திய மகா வித்தியாலயம் பழைய மாணவர் சங்கம்(U.K)
## Membership Application

Name:..........................................................................................................
Address:......................................................................................................
.............................................................................. Tel No:..........................................
Amount:...............(in words)......................................................................

எமது பாடசாலையின் முன்னாள் மாணவர்கள், ஆசிரியர்கள், பாடசாலை நலன்விரும்பிகள் ஆகியோரை எம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் உங்களால் இயன்ற உதவிகளை எமது பாடசாலைக்கு நல்குமாறும் கெட்டுக்கொள்கிறோம்

Cheque payable to V.C.C.Old Students Association and send to the payment to:
Mr.N.Balachandran, 4 Autumn Close, North Road, London Sw19 1UD

www.padippakam.com

## நன்றி கூறுகின்றோம்...

இன்றைய கலைவிழாவுக்கு வருகை தந்திருக்கும் பிரதம விருந்தினர் அவர்களுக்கும்
விழா சிறப்புற ல விதங்களிலும் உதவிகளும் ஒத்தாசைகளும் புரிந்த அனைவருக்கும்
ஆதரவளித்த வர்த்தகப் பெருமக்களுக்கும்
கலை நிகழ்ச்சிகளை நடாத்திய கலைஞர்களுக்கும்
உணவு வகைகள் தயாரித்த Palm Beach Restaurant இனருக்கும்
வானொலி நிறுவனத்தினருக்கும்
இன்றைய நிகழ்ச்சிகளை ஒலிப்பதிவு செய்தவர்களுக்கும்,
சங்கமம் மலர் அச்சிட்ட ஜே ஆர் அச்சகத்தினருக்கும்
எமது மனமுவந்த நன்றிகள்.



Aum Namo Narayana
ஓம் நமோ நாராயணாய

SAMRAS - 2000
Entertainment
Original Tamil & Hindi Video, Audio, CD's DVD
For wholesala & Retails

Tamil Magazine & Books also available here

174 Tooting High Street, Tooting, London SW17 0RX
Tel: 020 8672 9300 Mobile: 0956 315 434 Fax: 020 8682 3322

வாருங்கள் வந்து வாழ்த்துங்கள்

படிப்பகம்

www.padippakam.com



# RASAM GAYATRI SILKS

## மிலேனியத்தில் மிளிரும் ஜவுளி சமுத்திரம்



கண்கொள்ளாக் காட்சி தரும்
நவீன soft 7 வகை டிசைனில்
கூறைச்சேலைகள்
Millennium Designer Silk
Sarees, Daksinotri - Golden
Gayatri,
Kaanchi - Jari Tissue
Kolam - Rangoli Gold
Aboorva
Double Gold காஞ்சிபுரம்,
காஞ்சிக் கொட்டன்,
கதிர்க்கொட்டன், Stain Guard
Gayatri Meena Butta Silk
Sarees, தண்ணீர பட்டாலும்
தப்பித்துக் கொள்ளும் வண்ண
டிசைனில் மங்கையர்க்கு மனம்
மகிழ்விக்கும் கூறைச்
சேலைகள், பட்டு வேட்டி, பரத
நாட்டிய உடைகள், சர்வாணி,
குருத்தா, கொட்டன் வேட்டி,
சிறுவர்களுக்கான சிங்கப்பூர்
அமெரிக்க உடைகள்,
(Lanka Soli, Gagara Soli,
படையப்பா Style Suits

## Rasam Gayatri Silks

312 High Street North, East Ham, London E12 6SA

**Tel: 020 8552 6060**

Opening Hours: Mon - Sun:11.00 a.m. - 8.00 p.m.

## ராசம் காயத்திரி சில்க்ஸ்

சாரீரம் இல்லாமல் சங்கீதமா? ராசம் காயத்திரி காணாமல் சம்சாரமா?

Contact: Bala     website:www.rasamsilk.com



படிப்பகம்

www.padippakam.com




Printed by JR Print London Tel: 020 8503 6643

படிப்பகம்